


32ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 18 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 15, 2022

# கனடியப் பழமைவாதக் கட்சிக்குப் புதிய தலைவர்

2021 செப்ரெம்பரில் நடைபெற்ற கனடிய நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் தோல்வியுற்று மீண்டும் எதிர்க்கட்சியாக வந்த கனடியப் பழமைவாதக் கட்சியின் அப்போதைய தலைவர் Erin O'Toole 2022 பெப்பிரவரியில் தனது தலைமைப் பதவியைத் துறந்தார். அதன்பின்னர் நடைபெற்ற புதிய பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவில் ஐவர் போட்டியிட்டனர். அவர்கள் Pierre Poilievre, Jean Charest, Leslyn Lewis, Roman Baber மற்றும் Scott Aitchison ஆவர்.

கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு கனடா முழுவதிலும் உள்ள 338 தொகுதிகளுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டு நடத்தப்படும் தெரிவு ஆகும். அதாவது ஒவ்வொரு தொகுதியிலும் மொத்த வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையினை 100 ஆகக் கணக்கில் எடுத்து ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் அத்தொகுதியில் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். இவ்வாறே 338 தொகுதியிலும் நடைபெறும்.

இதனால், எத்தனைபேர் கட்சித் தலைவர் தெரிவில் வாக்களித்தாலும் பழமைவாதக் கட்சித் தலைவர் தெரிவிக்குப் போடப்பட்ட மொத்த வாக்குகள் 33,800 புள்ளிகளாகும். அவற்றில் குறைந்தது 16,901 புள்ளிகள் பெற்றவரே கட்சித் தலைவராக அறிவிக்கப்படுவார். இக்கட்சித்தலைவர் தெரிவிற்கு வாக்களிப்போர் தங்கள் தெரிவாக 1, 2, 3..... என வாக்காளர் அட்டையில் பதிவதன்மூலம் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர் எல்லோருக்கும் வாக்களிக்கலாம்.

முதலில் அவர்கள் முதலாவதாகப் பதிவு செய்யப்பட்ட வேட்பாளருக்கு அவர்களது வாக்குகள் அளிக்கப்பட்டு எண்ணப்படும். எவரும் 16,901 புள்ளிகள் பெறாவிட்டால் மிகக்குறைந்த வாக்குகள் பெற்ற வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகள் அவற்றில் உள்ள 2ஆவதாகப் பதிவு செய்யப்பட்டவருக்கு இடப்பட்டு மீண்டும் எண்ணப்படும்.


Pierre Poilievre, with Anaida and son Cruz    Thanks: CBC

கட்சித்தலைவர் தெரிவு 2022 செப்ரெம்பர் 10இல் நடைபெற்றது. 100 வாக்குகளுக்குக் குறைவாக மொத்த வாக்குகள் விழுந்த தொகுதியில் அவ்வாக்குகளின் எண்ணிக்கை 100ஆகக் கருதப்பட மாட்டாது. அத்தொகுதியில் விழுந்த வாக்குகள் அப்படியே எண்ணப்பட்டு மற்றத் தொகுதிகளுடன் கூட்டப்படும். இதனால் இம்முறை 338 தொகுதிகளிலும் விழுந்த மொத்த வாக்குகள் 33,737 புள்ளிகள் ஆகும். இம்முறை கட்சித் தலைவர் பதவிக்கு வெற்றிபெறுபவர் 16,869 புள்ளிகள் பெற வேண்டியதாக இருந்தது.

கனடியப் பழமைவாதக் கட்சியில் 678,702 உறுப்பினர் தற்போது இருக்கின்றனர். இதில் 437,854 பேர் இம்முறை நடைபெற்ற தலைவருக்கான தேர்தலில் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். இதில் 19,867 வாக்குகள் செல்லுபடியற்றன என தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 417,987 வாக்குகளும் தொகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு எண்ணப்பட்டன.

கனடியப் பழமைவாதக் கட்சியின் நிர்வாகத் தலைவர் Rob Batherson ஊடகங்களுக்குத் தெரிவிகையில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு, கனடாவில் நடைபெற்ற எந்த ஒரு கட்சித்தலைவர் தெரிவிலும் இல்லாதபடி அதிகூடிய வாக்குகள் அளிக்கப்பட்டு சாதனை படைத்துள்ளது என்றார்.


2020இல் நடைபெற்ற பழமைவாதக் கட்சித்தலைவர் தெரிவிற்கு 174,404 பேர் வாக்களித்திருந்தனர். 2013இல் நடைபெற்ற லிபரல் கட்சித்தலைவர் தெரிவிற்கு 104,552 பேர் வாக்களித்திருந்தனர்.

இம்முறை பழமைவாதக் கட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட Pierre Poilievre மட்டுமே 311,000இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கட்சியில் சேர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் உள்ள 118 பழமைவாதக்கட்சி உறுப்பினர்களில் 62 பேர் கட்சித்தலைவர் பதவிக்கு Pierre Poilievreஐ ஆதரித்திருந்தனர்.

2022 செப்ரெம்பர் 10ஆம் திகதி மாலை 8:00 மணிக்கு கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவின் முடிவு அறிவிக்கப்பட்டது.

Pierre Poilievre முதல் முறையாக எண்ணப்பட்ட வாக்குகளிலேயே மொத்தப் புள்ளிகளான 33,737இல் 68.15%ஆன 22,993 புள்ளிகளைப் பெற்று மிகவும் பெரும்பான்மையுடன், கனடியப் பழமைவாதக் கட்சித்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு அடுத்ததாக

(தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)



























# இராணி எலிசபெத்தின் மறைவும், மன்னர் சாள்ஸின் பதவி ஏற்பும்

1952 பெப்பிரவரி 6ஆம் திகதியில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் இராணியாகவும், கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து உட்பட 14 பொதுநலவாய அரசுகளின் அரசியாகவும் மற்றும் மேற்கூறிய 15 நாடுகள் உட்பட இலங்கை, இந்தியா போன்ற 56 பொதுநலவாய நாடுகளின் தலைவியாகவும் இருந்துவந்த இராணி இரண்டாம் எலிசபெத் 2022 செப்ரெம்பர் 8ஆம் திகதி 96 வயதில் இறையடி சேர்ந்தார்.

எலிசபெத் அலெக்ஸாண்ரா மேரி 1926ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி இலண்டன் நகரில் ஆறாம் ஜோர்ஜ் மன்னருக்கும் எலிசபெத் அரசியாருக்கும் மூத்த மகளாகப் பிறந்தார். அவர் பிறக்கும்போது அவரது பெற்றோர் Duke and Duchess of Yorkஆக இருந்தனர். எட்டாம் எட்வேர்ட் மன்னர் தன் காதலுக்காக முடிதுறந்ததைத் தொடர்ந்தே ஆறாம் ஜோர்ஜ் மன்னர் பதவி ஏற்றார்.

ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952 பெப்பிரவரியில் இயற்கை எய்தியபோது 25வயது நிரம்பிய இரண்டாம் எலிசபெத், இராணியானார். அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை, அதாவது 70 வருடங்களும் 214 நாட்களும் இராணியாக இருந்துள்ளார். இராணி இரண்டாம் எலிசபெத்திற்கு



1930ஆம் ஆண்டில் பிறந்த ஒரு சகோதரி இளவரசி மாகிரெட் இருந்தார். இராணி இரண்டாம் எலிசபெத், இளவரசர் பிலிப்பை 1947 நொவம்பர் 20இல் திருமணம் செய்தார். அவர்களுக்கு இளவரசர் சாள்ஸ் 1948 நொவம்பர் 14இலும் இளவரசி ஆன் 1950 ஒகஸ்ற் 15இலும் பிறந்தனர். அவர் இராணியாக முடிசூடிய பிற்பாடே அவர்களுக்கு இளவரசர் அன்றூ 1960ஆம் ஆண்டிலும் இளவரசர் எட்வேட் 1964ஆம் ஆண்டிலும் பிறந்தனர்.

இராணி இரண்டாம் எலிசபெத் 70 ஆண்டுகால அரசாட்சியை பிளாட்டினம் விழாவாக (Platinum Jubilee) 2022 பெப்பிரவரி 06ஆம் திகதி கொண்டாடினார். 2022 செப்ரெம்பர் 6ஆம் திகதி இராணி தனது அரசாட்சியில் 15ஆவது பிரிட்டிஷ் பிரதமராக Liz Trussஐ ஸ்கொட்லண்ட் நகரில் உள்ள Balmoral கோட்டையில் இருந்து நியமனம் செய்து வைத்தார். இதுவே இராணியால் நடத்தப்பட்ட உத்தியோகபூர்வமான இறுதி நிகழ்வு ஆகும். இளவரசர் பிலிப் தனது 99ஆவது வயதியல் 2021 ஏப்பிரலில் காலமாகியிருந்தார். இராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிக்கிரிகைகள் 2022 செப்ரெம்பர் 19ஆம் திகதி நடைபெற

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தமிழ் மக்களை அழிக்க வரும் போதைப்பொருள்




போதைப்பொருள் பாவித்த நபர் ஒருவர் தன் கூடப் பிறந்த சகோதரியை வன்புணர்விற்கு உட்படுத்திய சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது. இதனால் சகோதரியான அந்த யுவதி தற்கொலை செய்து தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். தமிழ் பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதற்கு இதுவொரு உதாரணமாகும்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனது மூத்த சகோதரனால் இவ்வாறான நிலைக்குத் தான் உள்ளாக்கப்பட்டுள்ளதாக தற்கொலை செய்வதற்கு முன்னதாக தனது தோழிக்குத் தனது குரலில் பதிவுசெய்து அனுப்பிவிட்டு 20 வயதான குறித்த யுவதி தன்னுயிரை மாய்த்திருக்கின்றார்.

யுவதியின் சகோதரன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டபோது, தான் செய்த குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழ் பிரதேசங்களில் கஞ்சா, ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை அதன் பயன்பாடு என்பன அதிகரித்து வருகின்றன. இளம் வயதினர் மத்தியில் இந்தப் பழக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதன் விளைவுகள் மோசமானதாக மாறி வருகின்றது.

இலங்கையில், போதைப்பொருள் கடத்தல் மற்றும், வியாபாரம் என்பன பரவலாகவே காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதால் காலையில் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் புத்தகப் பைகளை சோதனையிடும் நடவடிக்கையும் கல்வி அமைச்சின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



பாரிய போதைப்பொருள் வியாபாரம் என்பது தென்னிலங்கையில் பாதாள உலக செயற்பாடாக மேற்கொள்ளப்படுகின்றது. இன்று கொழும்பு உள்ளிட்ட தெற்கின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இச்சம்பவங்களில் கொல்லப்படுவோர் தொடர்பில் பொதுமக்கள் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தப் பாதுகாப்புத் தரப்பினர் அதிக அக்கறையெடுப்பதாகவும் தெரியவில்லை.

மாறிமாறித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வோரும், அதனால் கொல்லப்படுவோரும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றவர்களாகவே உள்ளனர். அவர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகள் இவ்வாறு மாறி மாறி கொலைகளில் வந்து முடிகின்றது. ஆனால், தென்னிலங்கையைப் போன்று பாதாள உலக செயற்பாட்டாளர்கள் என்று குறிப்பிடக் கூடியவர்களாக எவரும் தமிழ் பிரதேசங்களில் இல்லை. ஆனால், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை என்பது தமிழ் பிரதேசங்களில் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. இதனைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் எவையும் இல்லை.

கஞ்சா போதைப்பொருள் கடத்தல் தமிழ் பிரதேசங்களிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக வடக்கின் கடல் வழியாக இந்தியாவிலிருந்து கடத்தி வரப்படும் கஞ்சா தென்னிலங்கை பகுதிகளுக்குக் கடத்தப்படுகின்றது. ஹெரோயின், ஐஸ் போன்ற போதைப் பொருள்கள் தென்னிலங்கையிலிருந்து வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களுக்குக் கடத்தி வரப்படுகின்றன. தமிழ் பகுதிகளில் உள்ளவர்களுக்கும், தெற்கிலுள்ளவர்களுக்கும் இடையே இது குறித்த தொடர்புகள் பேணப்படுகின்றன.

போதைப்பொருள் கடத்தல்காரர்களும், விற்பனையாளர்களும் பெரும் செல்வந்தர்களாக மாறியுள்ளனர். போதைப்பொருளை பயன்படுத்துவோர் மோசமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தமிழ் பிரதேசங்களிலிருந்து கஞ்சா கடத்துகவேர் கஞ்சாவுடனேயே கைது செய்யப்படுகின்றமை தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளியாகி வருகின்றன. குற்றவாளிகளுக்கு எவ்வாறான தண்டனைகள் வழங்கப்படுகின்றது என்பதான தகவல்கள் வெளி வருவதில்லை. அதிகமான குற்றவாளிகள் ஏதோ வகையில் தண்டனையிலிருந்து தப்பி விடுகின்றனர். அவர்கள் மீண்டும் அதே வழியிலான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

போதைப்பொருள் விற்பனையாளர்களை நன்கறிந்த பொதுமக்களும் அவர்கள் குறித்த தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்கத் தயங்குகின்றனர். தகவல் சொன்னவர் குற்றவாளிகளுக்குக் காட்டிக் கொடுக்கப்படும் நிலை உள்ளதால் பொதுமக்கள் தங்கள் உயிர்களுக்குப் பயந்து பேசாமலிருந்து விடுகின்றனர்.



இதுதான் தமிழ் பிரதேசங்களில் கட்டுப்படுத்த முடியாத அளவில் போதைப் பொருள் விற்பனையும் பயன்பாடும் அதிகரித்துள்ளமைக்குக் காரணமாகும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடத் தயங்குவதில்லை. போதைப் பொருள் வாங்க பணம் இல்லையென்றால் களவு, கொள்ளைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அதற்காகக் கொலை செய்யவும் அவர்கள் தயாராக உள்ளனர்.

போதைப்பொருள் பயன்படுத்துவோரின் அடுத்த கட்டமாகப் பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. சிறுமிகள், வயோதிபப் பெண்களும் இதற்கு இரையாக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கூடப் பிறந்த சகோதரி என்றும் பார்க்காமல் மேற்கொள்ளப்பட்ட வல்லுறவு சம்பவமும் அதனால் அப்பெண் தற்கொலை செய்து கொண்டமையும் போதைப்பொருள் பாவனையின் விளைவாகவே நடைபெற்றுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரை மட்டும் நம்பியிராமல் சமூக அக்கறையாளர்கள் இக்கொடுமையான சம்பவங்களை தடுத்து நிறுத்த ஒரு பொறிமுறையை ஏற்படுத்த முடியாதா? என்கின்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுகின்றது.

போதைப்பொருளுக்கு எதிராக அமைப்பு ஒன்றை உருவாக்கி அவர்களிடம் பொதுமக்கள் தகவல்களை வழங்கும் படியான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலம் பிரதான பாதுகாப்புத் தரப்பினருக்குத் தகவல்களை வழங்கி குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும். அவர்கள் தப்பி விடுகின்றார்களா? அவர்களுக்கு சட்டத்தின் மூலமாக சரியான தண்டனை வழங்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்கும் பணியையும் அந்த அமைப்பு பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் இவ்வாறான அமைப்பு ஒன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையை விடவும் மோசமான பிரச்சினையினையும் அழிவையும் போதைப்பொருள் ஏற்படுத்தும்.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

-கருணாகரன்-

- குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம். அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில்தான் இருக்கிறது.
- பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.
- ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டு பிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.
- ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.
- வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படா விட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.
- குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.
- அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.

# கனடியப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

Jean Charestஇற்கு 16.07%, Leslyn Lewisஇற்கு 9.69%, Roman Baberஇற்கு 5.03%, மற்றும் Scott Aitchison இற்கு 1.06% புள்ளிகளும் கிடைத்தன.



Pierre Poilievre, Leslyn Lewis, Jean Charest, Roman Baber, Scott Aitchison
Thanks: CBC

நாடு முழுவதிலும் உள்ள 338 தொகுதிகளில் Pierre Poilievre 330 தொகுதிகளில் தனித்தனியே பெரும் பான்மைப் புள்ளிகளைப் பெற்றிருந்தார். குவிபெக் மாகாண முன்னாள் முதல்வரான Jean Charest மீதமுள்ள 8 தொகுதிகளில் பெரும்பான்மை புள்ளிகள் பெற்றிருந்தார். இவர் குவிபெக் மாகாணத்தில் உள்ள 78 தேர்தல் தொகுதிகளில் பெருமளவில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், குவிபெக் மாகாணத்தில் உள்ள 6 தொகுதிகளிலும் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள 2 தொகுதிகளுமாக 8 தொகுதிகளில் மட்டுமே பெரும் பான்மைப் புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

மொத்தமான தனிப்பட்ட வாக்குகளான 417,987 வாக்குகளில் 71%இற்கு மேற்பட்ட வாக்குகளை Pierre Poilievre பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

62 நாடாளுமன்ற உறுப்பினர்களதும் 7 பழமைவாதக்கட்சி மேற்சபை உறுப்பினர் களதும் வெளிப்படையான ஆதரவைப் பெற்றிருந்த Pierre Poilievre, கட்சிக்கு $6.7 மில்லியனைச் சேகரித்திருந்தார். இதேவேளை 16 நாடாளுமன்ற உறுப் பினர்களது வெளிப்படையான ஆதரவைப் பெற்றிருந்த Jean Charest, கட்சிக்கு $2.7 மில்லியனைச் சேர்த்திருந்தார்.

Pierre Poilievre கனடியப் பழமை வாதக்கட்சியின் தலைமைப் பதவியை வென்றபின் ஆற்றிய உரையில், "இன்று மக்கள் தமது வாழ்க்கையின் கட்டுப் பாட்டை இழந்து விட்டதாக உணர்கின்ற னர். இன்றிரவில் இருந்து உங்களுக்கு அதிக செலவையும், குறைவான வளங் களை வழங்கும் பழைய அரசாங்கத்தை மாற்றுவதற்கான பயணம் தொடங்குகிறது. எனது அரசாங்கம் உங்களுக்கு முதலிடம் கொடுக்கும். லிபரல் அரசால் உருவாக்கப்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உங்கள் பணத்தையும், உங்கள் வாழ்க்கையையும் மீண்டும் கட்டுப்பாட்டில் வைப்போம்" என்றார்.

அத்துடன் அவர் தனது வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது தான் 16 வயது தாய்க்கு மகனாகப் பிறந்து ஆசிரியர் களான பெற்றோருக்கு வளர்ப்பு மகனாக வளர்ந்தவர். இவ்வாறு ஒரு தாழ்மையான (humble) குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவன் என்றபடியால் என்னால் கனடியர்களது அவல நிலையைப் பற்றி அனுதாபம் கொள்ள முடியும் என்றார்.

Pierre Poilievre தனது கட்சித்தலைவர் வெற்றிக்குப் பின்னர் தனது கனடியப் பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை செப்ரெம்பர் 12இல் சந்தித்து உரையாடினார்.

அவர் அந்தக் கூட்டத்திற்கு மனைவி Anaida மற்றும் அவரது இரண்டாவது மகன் Cruz உடன் சென்றார். 2022 செப்ரெம்பர் 12 அவரது மகன் Cruz இனுடைய முதலாவது பிறந்தநாள்



ஆகும். பிறந்தநாள் கொண்டாட்டத்துடன் ஆரம்பமான முதலாவது பழமைவாதக் கட்சி நாடாளுமன்றக் கூட்டத்தில் Pierre Poilievre உரையாற்றினார். "கட்சிக்கான தலைவர் தெரிவின்போது நீங்கள் ஆதரித்த வேட்பாளர் யாராக இருந்தா லும் பரவாயில்லை. நீங்கள் நடுநிலை வகித்திருந்தாலும் பரவாயில்லை. உங்கள் பங்களிப்பிற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நாங்கள் அனைவரும் தற்போது ஒன்றாக இருக்கிறோம். நாங்கள் அனைவரும் சிறந்த பழமை

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)


**Provincial election | October 3, 2022**

**Until September 29**

Register your name on the list of electors or change your entry

- To vote, you must be registered on the list of electors.
- You can make sure by checking the notice of entry sent by mail or by visiting our website, at **www.elections.quebec/check**.
- If your name does not appear on the list or if you notice an error, go to the address on your notice.*
- Bring one or more pieces of identification that together show your **name**, **date of birth** and **address**.
- On September 23, 24, 27, 28 and 29, you can vote at the same time.*



**On September 25 and 26, from 9:30 a.m. to 8 p.m.**

Vote in the advance poll

- Check the address of your advance polling station on the notice of entry sent by mail or on our website, at **www.elections.quebec/where-when**.*

**On October 3, from 9:30 a.m. to 8 p.m.**

Vote on election day

- Check the address of your polling station on the **yellow** reminder card sent by mail or on our website, at **www.elections.quebec/where-when**.*

Bring one of the five pieces of identification required to vote

(Québec driver's licence, health insurance card, Canadian passport, Indian status card or Canadian Forces identification card).

**Experience democracy as a family!**

Do you have young children? Introduce them to democracy by accompanying them to the small polling stations. Set up in each polling place, the small polling stations allow children to answer a question specially created for them. Discover this question at **www.elections.quebec/smallpolling**.



For more information

- Visit our website, at **www.elections.quebec/en**
- Contact us:
  - by phone: **1-888-ELECTION** (1-888-353-2846)
  - by e-mail: **info@electionsquebec.qc.ca**
  - by SMS: **868372** (VOTEQC) (standard fees apply)

* All advance polling places are accessible as well as most of the places where you can vote on October 3. To learn more about the accessibility criteria for each place, visit **www.elections.quebec/where-when**. If your voting place does not meet your needs, contact your returning officer to request permission to vote at another place in your electoral division.

**On October 3,
let's reverse the trend.
Let's all vote.**

élections Québec

## நாமும் நமது இல்லமும் 615

# கனடிய வட்டி மேலும் அதிகரிப்பு


ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய ஆதன விலை வியாபாரம் ஏற்கனவே இறங்குமுகமாகக் காணப்படுகின்றது. செப்ரெம்பர் 07, 2022இல் ஏற்படுத்திய மேலதிக வட்டிவீத அதிகரிப்பு எரிகின்ற நெருப்பில் ஊற்றிய எண்ணெய் போல, மேலதிக பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது. இவ்வருட (2022) ஆரம்பத்தில் இருந்த வட்டி வீதம் 0.25%இலிருந்து தொடர்ந்த அதிகரிப்பின் தொடர்ச்சியாக 0.75 ஏற்படுத்தப்பட்டு 3.25%ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், கனடிய முதன்மை வட்டி வீதமும் 5.45%ஆக அதிகரித்துள்ளது. வட்டிவீத அதிகரிப்பால் மட்டுமே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பது மத்திய வங்கியின் கொள்கையாக உள்ளது.

கோவிட்-19இன் காலத்தில் அரசின் தொடர்ச்சியான இலகுவான பணம் கனடியர்களின் செலவு முறை இலகுவாக்கப்பட்டது. இதனால், எதிர்பாராத அளவிற்குப் பணவீக்கம் அதிகரித்துள்ளது. அத்துடன் ஆதன விலையும், வியாபாரமும் மிக அதிகமாக்கப்பட்டது. 2008 - 2009ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த பணநெருக்கடி ஆதன விலை இறக்கம் போன்ற நிலையை நோக்கி இப்பொழுது நகர்வதனைக் காணலாம். கடந்த ஐந்து (5) மாதங்களிலும் வட்டி வீத அதிகரிப்பால், விலையும் தொடர்ந்து குறைவதனைக் காணலாம்.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஆதன விலை கடந்த ஐந்து மாதங்களிலும் 16% இறக்கம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது ஏற்படுத்திய 0.75% மேலதிக இறக்கத்தை எதிர்காலத்தில் காணலாம். அத்துடன் இவ்வருடத்தில் மேலதிக வட்டி அதிகரிப்பும் ஏற்படுத்தப்படும் என கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

| AUGUST 2022 HOUSING MARKET BY REGION | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | $1,031,979 | $1,265,628 | $920,269 | $1,062,984 | $1,207,303 |
| Total # New Listings | 3,785 | 1,785 | 1,275 | 2,117 | 1,044 |
| Total # Sales | 1,892 | 1,063 | 806 | 1,058 | 589 |
| Avg. Listing Days On Market (LDOM) | 23 | 23 | 17 | 22 | 25 |
| YTD Increase | 12% | 14% | 18% | 17% | 17% |
| HOUSE TYPES & AVERAGE SALE PRICE | | | | | |
| Detached | $1,648,298 | $1,579,540 | $1,012,181 | $1,343,930 | $1,519,733 |
| Semi-Detached | $1,127,429 | $1,047,822 | $772,517 | $955,655 | $1,028,012 |
| Townhouse | $1,100,811 | $1,104,043 | $809,189 | $916,356 | $1,000,068 |
| Condo Apt | $736,940 | $680,434 | $552,448 | $603,288 | $750,909 |

Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS lSource: TRREB Data As of, Sep.02/2022



கடந்த இரு வருடங்களிலும் ரொறொன்ரோவின் கிழக்கு பகுதியிலிருக்கும் டுர்காம் (Durham) பகுதியிலும் மேற்கு பகுதியிலிருக்கும் ஹால்ரன் (Halton) பகுதியிலும் முறையே 90% மற்றும் 70%ஆக விலை அதிகரிப்பு ஏற்பட்டு இருந்தது. இப்பொழுது இந்தப் பகுதிகளில் அதிக விலை இறக்கத்தை காணக்கூடியதாக உள்ளது. ஒப்பீட்டளவில், ரொறொன்ரோவில் விலை இறக்கம் குறைவாகவே காணப்படுகின்றது.

வட்டி அதிகரிப்பால் புதிதாக அடமானக் கடன் பெறுவதில் நெருக்கடி அதிகரிக்கின்றது. ஏனெனில், கடன் பெறுவதற்கு வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியே செலவழிக்க முடியும். வட்டி வீத அதிகரிப்பால், கடன்பெறும் தொகை குறைக்கப்படுகின்றது. இந்நிலைமை தொடரும்போது, முதல் தடவையாக ஆதனம் வாங்குவோரிற்கு மேலும் நெருக்கடி ஏற்படும் என்பது இயல்பானதே.

கனடிய மத்திய வங்கியின் பணவீக்கக் கொள்கை 2% ஆகும். ஏற்கனவே பணவீக்கம் 8%ஐ தாண்டியுள்ளது. இதனை 2%ஆகக் கொண்டு வருவதனை நோக்கமாக, தொடர்ச்சியான வட்டிவீத அதிகரிப்பு தேவையென வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியான வட்டி வீத அதிகரிப்பு கனடிய பொருளாதாரத்தை நெருக்கடியில் உருவாக்கி, பொருளாதார சுருக்கத்தை (Recession) ஏற்படுத்தும். இப்பொழுது வங்கியின் ஆளுநருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பணவீக்கத்தை இறக்குவதா அல்லது பொருளாதாரச் சுருக்கத்தை தவிர்ப்பதா?

பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே முதல் நோக்கம். இதனால் பொருளாதாரச் சுருக்கம் தவிர்க்க முடியாமலே போகும். இதனால் கனடியர்கள் பலர் தொழிலை இழக்க வேண்டி ஏற்படலாம். அடமானம் செலுத்துவதில் இறுக்க நிலை ஏற்படும். இதனால் ஆதனத்தின் வியாபாரத்தில் மேலும் நெருக்கடியை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்.



# ஜெனீவா அழுத்தங்கள் சர்வதேச உதவிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்!

**- விகிர்தன் -**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கூட்டத்தொடர் 12ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் பங்கேற்பதற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ ஆகியோர் ஏற்கனவே ஜெனிவாவிற்கு சென்று அங்கு கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் ஜெனீவா சென்றுள்ளது. மேலும், தமிழ் அரசியல் வாதிகள் சிலரும் ஜெனிவா சென்றடைந்துள்ளனர்.

ஒவ்வொரு ஜெனீவா அமர்வின் போதும் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற அழுத்தங்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன. இம்முறையும் அது நடக்கும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும், புலம் பெயர் தமிழர்களும் சர்வதேச பொறி முறையின் ஊடாகவே போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இணை அனுசரணை வழங்கும் நாடுகளும் இதனையே வலியுறுத்தி வருகின்றன.

கடந்த காலங்களிலும் சர்வதேச பொறிமுறையை நிராகரித்து வந்த இலங்கை, இம்முறையும் அதனையே செய்யப் போகின்றது. இணை அனுசரணை நாடுகளால் முன்வைக்கப் படக்கூடிய இலங்கை அரசியலமைப்பிற்கு ஒவ்வாத எந்தவொரு வெளியகப் பொறிமுறையையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கு மாற்றாக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவுள்ள தாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களைத் திரட்டு வதற்கான வெளியகப் பொறிமுறை குறித்து தாங்கள் தொடர்ந்தும் எதிர்ப்பையே வெளிப்படுத்துவோம் என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.




கடந்த காலத்தில் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியன ஸ்தாபிக்கப்பட்டிருப் பதுடன் அவற்றின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் அடையப்பட்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அரசாங்கத்தால் வெறும் கண்துடைப்பாக உருவாக்கப்பட்ட இந்த அமைப்புக்களால் எவ்வித நன்மையும் கிட்டவில்லை என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகமும் அறியும். இதை விடவும் தற்போது நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையிலும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டவர் கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அமைதி வழியில் போராட்டம் செய்தவர்களை கைது செய்யவில்லை, வன்முறையில் ஈடுபட்டவர்களை மட்டுமே தேடிக் கைது செய்கின்றோம் என்று நாட்டில் இன்று ஜனாதிபதியாகப் பொறுப்பு வகிக்கின்ற ரணில் விக்ரமசிங்க கூறினாலும், அமைதி வழியில் போராடிய வர்களும் கைது செய்யப்படுகின்றனர் என்பதுதான் உண்மை.

இதற்கு நல்லதொரு உதாரணம் நடிகை தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டமை யாகும். சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற சாத்வீக போராட்டம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்பும் வழியில் இவர் கைது செய்யப்பட்டு, விளக்க மறியிலில் வைக்கப்பட்டார். கடந்த 12ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் வன்முறை சம்பவங்கள் எதிலும் ஈடுபடவில்லை. போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு அதனுள் பிரவேசித்த வேளையில் நடிகை தமிதாவும் உள்ளே சென்றார். போராட்டக் காரர்களின் கட்டுப்பாட்டில் ஜனாதிபதி செயலகம் இருந்தபோது, பொதுமக்கள் பலரும்கூட அதற்குள் பிரவேசித்தனர். அவர்களை கைது செய்வது இப்போதைய நிலையில் பொருத்தமான நடவடிக்கை இல்லை. இவ்வாறான கைதுகளை சர்வதேச மன்னிப்பு சபையும் கண்டித்துள்ளது. வேறு சர்வதேச அமைப்புக்களும் கண்டித்து வருகின்றன. ஆகவே, மனித உரிமை மீறல்கள் தற்போதும் நடைபெற்று வருகின்றமை யினை சர்வதேசம் கூர்மையாக அவதானித்துக் கொண்டுதானிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பதில் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையை ஆரம்ப நாளான 12ஆம் திகதி சபையில் சமர்ப்பித்தார்.

மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை யின் நிலை மிகவும் பலவீனமாக இருப்பதாகவும், மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என்றும் பதில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முக்கியமான நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆழமான, ஜனநாயக மற்றும் பாதுகாப்பு சீர்திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கவலை வெளியிட்ட அவர், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தப்போவதில்லை என அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை மீறியமை குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள போதும் காணாமல்போனவர் களின் உறவினர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், சமூக செயற்பாட்டாளர்கள், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், மாணவர்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நீதியை நிலைநாட்டாமை, வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கல் நடவடிக்கை மற்றும், காணி அபகரிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கும் அவர் கண்டனம் வெளியிட்டார்.

தற்போது நிலவும் நெருக்கடியானது இலங்கையில் மனித உரிமைகள் மேலும் சீர்குலைவதற்கு வழிவகுக்கும் என்று கனடா கவலை வெளியிட்டுள்ளது. குறிப்பாக நாட்டின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களுக்கு தற்போதைய நெருக்கடியானது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கனடா கூறியுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாடு உட்பட, போராட்டக்காரர்கள் மீதான சமீபத்திய நடவடிக்கை குறித்து நியூசிலாந்து கவலை வெளியிட்டுள்ளது. மேலும் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகள் முக்கியமானவை என்றும் நியூசிலாந்து வலியுறுத்தியுள்ளது. 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான பிரச்சினைகளில் முன்னேற்றம் இல்லாதது குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது. உள்நாட்டு பொறுப்புக் கூறல் செயன்முறைகள் நடைபெறாமை காரணமாக இலங்கையில் சாட்சியங்களை

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நானிலம் போற்றும் நட்பு - 6



- அகணி -
authorakani@gmail.com

திருவள்ளுவர் குறள் 786
“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.” என்ற குறளுக்கு “முகம் மட்டும் மலரும் படியாக நட்பு செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்” என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“பார்க்கும்பொழுது முகத்தில் சிரிப்போடு பழகுவது மட்டுமே நட்பு ஆகாது. உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி கொண்டு பழகுவதே நட்பு ஆகும்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பு ஆகும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார். உள்ளமும் மலரும் படியாகப் பழகுவதே நட்பு என இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது. எனவே இன்முகத்தோடும் உள்ளமும் மலரும்படியாகவும் நட்பு செய்து வாழ்தல் முக்கியமானது என்ற கருத்தை உள்வாங்கிக் கொள்வோம். இவ்வாறு பழகும் நண்பர்களுடன் நட்பைப் பேணுவதற்கு எல்லோரும் விரும்புவர்.


உளவியல் ரீதியாகவும் மகிழ்வாகவும் நேர்மறையான எண்ணத்துடனும் பழகும் பொழுது மனவழுத்தங்கள் நீங்கும். மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எனவே இத்தகைய நட்பினால் இருதரப்பிலும் நன்மை ஏற்படும். நட்பு நீடித்து நிலைக்கும்.

நண்பர்கள் தனிமைப்படுத்தப்படுவதையும் தனிமையையும் தடுக்கின்றனர் மற்றும் உங்களுக்குத் தேவையான தோழமையை வழங்குவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றனர். உங்களின் நோக்கத்தை அதிகரிக்கவும். உங்கள் மகிழ்ச்சியை அதிகரிக்கவும், உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்கவும் நண்பர்கள் உதவலாம்.

உங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் நண்பர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வலுவான சமூக இணைப்புகளைக் கொண்ட பெரியவர்கள் பல குறிப்பிடத்தக்க ஆரோக்கியத்தின் அபாயத்தைக் குறைக்கிறார்கள்.




நண்பர்கள் எங்களுக்குச் சொந்தம் என்ற உணர்வைத் தருகிறார்கள், வேடிக்கையையும் சிரிப்பையும் தருகிறார்கள், கூடுதல் கைகொடுக்கிறார்கள், உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்குகிறார்கள், உங்களுக்குத் தேவைப்படும்போது வழிகாட்டுகின்றனர். மேலும், நீங்கள் அதை உணர்ந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்களின் செல்வாக்கு அந்த தருணத்திற்கு அப்பால் செல்கிறது. உங்கள் நெருங்கிய நட்பு உங்கள் வாழ்க்கையின் போக்கை வடிவமைக்க உதவுகிறது.



கடினமான நேரங்கள் வரும்போது தொடர்ந்து செல்லவும், உங்கள் வெற்றிகளை உங்களுடன் கொண்டாடவும் அவை உங்களை ஊக்குவிக்கின்றன.

கல்விச் செயல்பாட்டில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்கள் ஆதரவு மற்றும் ஊக்கம் ஆகியவற்றை வழங்குகின்றனர். மற்றும் கல்வியில் சாதனைகளை செய்யவும் நண்பர்களின் பங்களிப்பு பெரிதும் உதவுகின்றது.

நண்பர்களுடன் உரையாடும் பாங்கு அதிக நண்பர்களைப் பெறவும், நட்பை நீடித்துப் பேணவும் முக்கிய காரணியாக அமைகின்றது. நேர்மறையான உரையாடல், நண்பர்கள் கூறுவதைக் கவனித்துக் கேட்டல், சுயநலப் போக்கின்றிப் பேசுதல் போன்றவை மிகவும் முக்கியமான விடயங்களாக உள்ளன.

சிறுபராய நட்பு தொடருமானால் மிகவும் பலமான நட்பாக விளங்கும். சிறுபராயத்து நிகழ்வுகள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இதுவும் சிறுபராய நட்புகள் பலமான நட்பாக விளங்குவதற்குக் காரணமாக உள்ளதெனலாம். ஒரே வயது, நம்பிக்கை, புரிந்துணர்வு போன்றவையும் சிறுபராய நட்பின் சிறப்பிற்குக் காரணிகளாக உள்ளன.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நட்பு என்பது எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொண்டு நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். நட்பினைப் பெரிதாக மதிக்க வேண்டும்.

நாங்கள் சிறுவயதில் ஒரு கதையைக் கேட்டு அறிந்திருக்கின்றோம். ஒருவர் தனது பிள்ளைகளுக்கு தடிகளை தனித்தனியே எடுத்து முறிக்குமாறு கூறுவார். பின்பு கட்டாகக் கொடுத்து முறிக்குமாறு கூற அவர்களுக்கு முடியாமல் போய்விடும். சகோதரர்கள் ஆகிய நீங்கள் சேர்ந்து ஒற்றுமையாக இருந்தால் உங்களை யாரும் வெல்ல முடியாது. நீங்கள் பலமானவர்களாக இருப்பீர்கள் என்று தந்தை புத்திமதி கூறுவார். இந்தக் கதை நண்பர்களுக்கும் பொருந்தும். நல்ல நண்பர்கள் சிலரைக் கொண்டவன் பலமானவனாக இருப்பார். நண்பர்கள் இல்லாது தனித்து வாழ்வோர் பலமற்றவர்களாக இருப்பர்.

எனது சிறுவயதுப் பராயத்தில் நண்பன் ஒருவனுக்குக் கை முறிந்து விட்டது. அதனால் கையைத் தூக்கிக் கட்டிய படியேதான் பாடசாலைக்குச் சிலகாலம் வந்தார். அதுவும் வலது கை என்பதால் அவரால் எழுத முடியவில்லை. நான் குறிப்பெடுக்கும் நேரத்தில் அவரின் கொப்பியிலும் எழுதி எனக்கும் குறிப்பெடுத்துக் கொள்வேன். அதை மிகவும் விரும்பிச் செய்தேன். இவ்வாறான சிறு சிறு சம்பவங்கள் நண்பர்களுக் கிடையே நடைபெறும்பொழுது எம்மையறியாமலே பலமான நட்பு தோன்றிவிடும்.

இக்கட்டுரைக்கான தேடுதலின் பொழுது ஸ்ரோரி பிக் என்ற இணையத்தளத்தில் சில உண்மைக் கதைகளைப் படித்தேன். அவை மனதை நெகிழவைத்தன. அவற்றின் மொழிபெயர்ப்பினைக் கீழே தந்துள்ளேன்.

“40 வயதான எலிசபெத் டயமண்ட், குணப்படுத்த முடியாத மூளை புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் இறந்த பிறகு தனது 4 மகள்களை கவனித்துக்கொள்வதாகத் தனது பால்ய தோழியான லாரா ரஃபினோ உறுதியளித்திருந்தார்”.

“ஒரு கட்டத்தில், ராஜ் கபூர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார், மேலும் அவரது நண்பரின் நிலை ஹிரிதாவை மிகவும் கவலையடையச் செய்தது, அவர் ராஜ் கபூரின் உயிருக்கு பயப்படத் தொடங்கினார். இது ஆனந்தின் திரைக்கதையை எழுத ஹிரிதாவைத் தூண்டியது, அந்தத் திரைப்படத்தை அவர் இறுதியில் ராஜ் கபூருக்கு அர்ப்பணித்தார். அவர் தனது கனவுகளுக்கு வழிகாட்டிய நகரமான பம்பாய்க்குத் திரைப்படத்தை அர்ப்பணித்தார்”.

“ஜேம்ஸ் வில்மெர்ட் கற்றல் குறைபாடுடன் போராடுகிறார், தத்தெடுக்கப்பட்டார் மற்றும் ஒரு சோகமான விபத்தில் தனது இரண்டாவது தந்தையை இழந்தார். ஒருமுறை, ஐந்தாம் வகுப்பு படிக்கும் சக மாணவர்கள், ஜேம்ஸ் பள்ளி விளையாட்டு மைதானத்தில் சக தோழர்களால் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டனர். Jack Pemble, Jake Burgess, Gus Gartzke, Tyler Jones மற்றும் Landon Kopischke ஆகியோர் இணைந்து, ஜேம்ஸைப் பாதுகாத்து, அவருடைய வாழ்க்கையில் முற்றிலும் காணாமல் போன ஓர் உண்மையான நட்பை அவருக்குப் பரிசாக அளித்தனர். ஜேம்ஸ் அவர்களின் வேடிக்கையான ஒன்றுகூடல் அமர்வுகளில் வழக்கமான பகுதியாக மாறியபோது, அவரும் விளையாட்டின் மீதான தங்கள் அன்பைப் பகிர்ந்து கொண்டார் என்பதை அவர்கள் அறிந்தனர். பிளேஸ்டேன் 3 ஐ வாங்குவதற்கு அவர்கள் கொஞ்சம் பணம் செலவழித்தனர்”.

“89 வயதான இரண்டாம் உலகப் போரின் மூத்த வீரர் எர்லிங் கிண்டம் மற்றும் கிட்டத்தட்ட 4 வயதான எம்மெட் ரைச்னர் சிறந்த நண்பர்கள் மற்றும் அவர்களுக்கு பிடித்த கடந்த கால செயல்பாடுகளில் சில: கொல்லைப்புறத்தில் பேஸ்பால் மற்றும் ஸ்டார் வார்ஸ் விளையாடுவது, பைக்குகளை சரிசெய்தல், மற்றும் பந்தய புல் வெட்டுவது போன்றவை.

அவர்கள் எப்பொழுதும் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தனர். ஆனால், எம்மெட்டின் பெற்றோர் தங்கள் வளர்ந்து வரும் குடும்பத்தை ஒரு பெரிய வீட்டில், வேறொரு இடத்தில் வைத்து ஆதரிக்க முடிவு செய்யும் வரையில் எல்லாம் நன்றாக இருந்தது. அதே நேரத்தில், எர்லிங்கின் குழந்தைகளும் விரைவில் 90 வயதான அப்பாவாக இருக்க வேண்டும் என்று தனது நோய்வாய்ப்பட்ட மனைவியுடன் மூத்த குடியிருப்பில் செல்லுமாறு கேட்டுக் கொண்டனர். இருவரும் கண்ணீருடன் பிரிந்தனராம்”
இவ்வாறாக ஆயிரம் ஆயிரம் உண்மைக் கதைகள் நட்பின் பலத்தைப் பறைசாற்றும்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# கனடியப்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

வாதக் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம்.” என்றார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “நாட்டில் தற்போதுள்ள பிரச்சினை எங்களுக்குத் தெரியும். தற்போதைய அரசாங்கத்தின் அதீத செலவு வாழ்க்கைச் செலவை உயர்த்துகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் $500 பில்லியனால் கனடிய அரசின் கடனில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டதை சுட்டிக் காட்டி, அரசாங்கம் இனிமேல் தமது வரவு-செலவுத் திட்டங்களின்போது ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். செலவழிக்கும் ஒவ்வொரு டொலருக்கும், ஒரு டொலரைச் சேமிக்கும் வழி அதில் இருக்கவேண்டும். இதையே நாம் கடைப்பிடிப்போம்” என்றார்.




Pierre Poilievre 1979 யூன் 3இல் கல்கரியில் பிறந்தார். இவர் Irish குடும்பத்தைச் சேர்ந்த 16 வயது ஒற்றைத் தாய்க்கு பிள்ளையாகப் பிறந்தார். அப்போது அவருடைய தாயாரின் தாயார் இறந்தபடியால் அவரை பிரஞ்ச் கனடியத் தம்பதிகளுக்கு வளர்ப்பு மகனாகத் தத்துக் கொடுக்கப்பட்டார். இவரது வளர்ப்புப் பெற்றோர் ஆசிரியர். Pierre கல்கரியில் இளமைக்காலத்தில் கல்வி பயின்று பின்னர் கல்கரி பல்கலைக் கழகத்தில் இளங்கலைமானிப்பட்டம் பெற்றார். இவர் பதின்மவயதினிலேயே Reform கட்சி உறுப்பினராகி அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். இவர் 20 வயதில், தான் பிரதமரானால் என்ன செய்வேன் என எழுதிய போட்டிக் கட்டுரை புத்தகத்தில் பிரசுரமாகி இவருக்கு $10,000 பரிசையும் பெற்றுக் கொடுத்தது. அக்கட்டுரைக்கு அவர் “சுதந்திரத்தின் மூலம் கனடாவை கட்டியெழுப்புதல்” [Building Canada Through Freedom] எனத் தலைப்பிட்டிருந்தார். அவர் அக்காலம் தொட்டே கனடிய அரசாங்கத்தின் அதீத செலவுகளைக் குறைக்க வேண்டும் எனவும், கனடிய அரசின் கடன் சுமையை குறைக்க வேண்டுமென எழுதி வருகிறார்.

Pierre 2004ஆம் ஆண்டில் ஒட்டாவாவில் உள்ள Nepean - Carleton தொகுதியில் பழமைவாதக்கட்சியின் சார்பில் கனடிய நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். கனடிய நாடாளுமன்றத்திற்கு 25 வயதில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு Pierre, அந்நாடாளுமன்றத்தின் வயதில் குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். அன்றில் இருந்து Pierre கனடிய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

Pierre 2017இல் நாடாளுமன்றத்தில் அரசியல் ஊழியராகப் பணிபுரிந்த Anaidaஐத் திருமணம் செய்தார். இவர்கள் இருவருக்கும் Valentina மற்றும் Cruz என இரு குழந்தைகள் இருக்கின்றனர்.

Pierreஇன் கட்சித்தலைவர் வெற்றிக்குப் பின்னர் Anaida ஆற்றிய உரையில் தான் Venezuelaஇல் பிறந்தவர் எனவும் அவரது தகப்பனார் தங்களை எவ்வாறு வளர்த்தார் எனவும் கூறினார். பின்னர் தமது குடும்பம் கனடாவிற்கு, தான் எட்டு வயதில் இருக்கும்போது குடிபெயர்ந்தது என்றார். 1995இல் மொன்றியலுக்குக் குடிபெயர்ந்த அவரது குடும்பம் ஒரு சிறு வணிகத்தில் ஈடுபட்டு வந்ததாகக் கூறினார். ஆங்கிலம், பிரஞ்ச் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் பேசிய Anaida ஒட்டாவா பல்கலைக்கழக இளங்கலை மானிப்பட்டதாரி ஆவார்.



Pierreஇன் கட்சித்தலைவருக்கான வெற்றியைத் தொடர்ந்து Jean Charestஐ தலைவர் பதவிக்கு ஆதரித்து வந்த குவிபெக் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் Alain Rayes பழமைவாதக் கட்சியில் இருந்து விலகி சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார்.

# இராணி...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது.



இராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் அரியணையில் ஏறி அதிகாரபூர்வமாக மூன்றாம் சாள்ஸ் மன்னரானார். அவருக்கு வயது 73. மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் இதுவரை வைத்திருந்த வேல்ஸ் இளவரசர் பட்டத்தைத் தனது மூத்த மகனான வில்லியத்திற்கு வழங்கினார். “வேல்ஸ் இளவரசர்” பட்டம் அடுத்து மன்னராக வரவிருப்பவருக்கு வழங்கப்படும் பட்டமாகும். வேல்ஸ் இளவரசர் வில்லியத்தின் மனைவியான கத்தரின், வேல்ஸ் இளவரசிப் பட்டத்தைப் பெற்றார்.

மூன்றாம் சாள்ஸ் மன்னர் ஏனைய பிரிட்டிஷ் சாம்ராஜியத்தை ஆண்ட அரச பரம்பரையினர் போல் வீட்டில் இருந்து கல்வி கற்காமல் சாதாரண மக்களுடன் பாடசாலை சென்று கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் Cambridge பல்கலைக்கழகத்தில் இளங்கலைமானிப்பட்டம் பெற்றவர். இவர் இளவரசராக இருந்தபோது Royal Air Force மற்றும் Royal Navy இரண்டிலும் பணியாற்றியவர். 1970களில் பல போர்க்கப்பல்களிலும் சேவை புரிந்துள்ளார். இவர் 2005ஆம் ஆண்டு கமிலாவை இரண்டாவது திருமணம் செய்தார்.

2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் இராணி இரண்டாம் எலிசபெத் தனது விருப்பமாகத் தனது மூத்த மகன் சாள்ஸ் மன்னராகப் பதவி ஏற்கும்போது கமிலா இராணித் துணைவியார் (Queen Consort) ஆக அழைக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

# ஜெனீவா...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

சேகரிக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பணி தொடர வேண்டும் என்றும் பிரித்தானியா கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் முழுமையாக ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என பிரான்ஸ் கேட்டுக்கொண்டுள்ளது. குறிப்பாக, இலங்கை அரசாங்கம் தனது நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் பாலின அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக அயர்லாந்து சுட்டிக்காட்டியுள்ளது. இந்த வன்முறை காரணமாக பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதிக்கப்படுவது அதிகரித்து வருவது குறித்து கவலை வெளியிட்டுள்ளது. அத்தோடு, சர்வதேச சட்டத்திற்கு முழுமையாக இணங்கும்வரை பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என அயர்லாந்து வலியுறுத்தியுள்ளது. இவ்வாறு, இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை கவனமாகவே பதிவாகியுள்ளது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சர்வதேசத்தின் முற்றுமுழுதான இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புள்ளதாக இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது. ஜெனீவாவில் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், அழுத்தங்கள் என்பன இலங்கை அரசாங்கம் தற்போது




எதிர்பார்த்து நிற்கும் சர்வதேச உதவிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

**துரோகங்கள் நமக்கு**
**கற்றுக் கொடுப்பவை**
**ஒன்று தான்**
**சற்றே சுயநலமாய்**
**இருந்திருக்கலாம்**
**என்று..**

# மாற்றத்துக்காக கற்றுக் கொடுங்கள் ஒரு நடிகையின் வித்தியாச முயற்சி

## நேர்கண்டவர் - கண்ணன்

தமிழ்நாட்டில் ஏழை மாணவர்களுக்கு எட்டா கனியாக இருக்கும் ஆங்கிலத்தை அவர்கள் கற்றுக்கொள்ள ஏணிப்படியாய் செயலாற்றி வருகிறார் நடிகை லட்சுமி மஞ்சு. ரஜினிகாந்த்தின் நெருங்கிய நண்பரும் தெலுங்கில் முன்னணி நடிகருமான மோகன்பாபுவின் மகள்தான் லட்சுமி மஞ்சு. ஐந்து வயதிலேயே நடிக்க ஆரம்பித்தவர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என அனைத்து தென்னிந்திய மொழி திரையுலகிலும் வலம் வரும் நடிகை. இந்தி, ஆங்கில மொழித் திரைப்படங்களிலும் நடித்து வருகிறார். திரைப்பட தயாரிப்பாளரும்கூட. விரல் அசைவுக்கு ஒரு வேலை ஆள் என்ற வசதிக்குச் சொந்தக்காரர். இருப்பினும் குடிசைப் பகுதி மாணவர்கள் மத்தியிலேயே சுற்றி வருகிறது லட்சுமி மஞ்சுவின் மனசு. அவரை சந்தித்தோம்.

**இப்படியொரு எண்ணம் எப்படி வந்தது?**



எந்த பள்ளியாக இருந்தாலும் படிக்கிற குழந்தை படித்திடுமென்று சொல்வார்கள். ஆனாலும், தமிழ்நாட்டில் தமிழ் வழியில் படிக்கிற, குறிப்பாக அரசு பள்ளி கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலத்தில் பலவீனமாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை நிலவரம். இதனால் வேலை வாய்ப்பு உட்பட வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர், பின் தங்குகின்றனர். நல்ல பள்ளியில் படிக்க வசதியில்லாத மாணவர்கள் ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும் சரியான பயிற்சி இருந்தால்தானே அவர்களால் ஆங்கிலத்தில் புலமை பெறமுடியும். அதற்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் பத்தாம் வகுப்பு படித்த போதே எனக்குள் எழுந்தது. படித்துக் கொண்டே ஆந்திராவில் உள்ள ஏழை மாணவர்களுக்கு அவர்கள் படிக்கும் கார்பரேஷன் பள்ளிகளுக்கே சென்று ஆங்கிலம் கற்றுக்கொடுத்தேன். இந்தப் பணி என் மனசுக்கு சந்தோஷத்தைக் கொடுத்ததால் எனக்குத் துணையாக சில நல்ல உள்ளங்களைச் சேர்த்துக்கொண்டு தொடர்ந்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பு எடுத்தேன். இப்படி நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்திருக்கிறோம்.

**சென்னையில் எப்போது இந்தப் பணியைத் தொடங்கினீர்கள்?**

2016இல் தொடங்கினோம். தனிப் பெண்ணாக இதைச் செய்வதென்பது சாத்தியமில்லை. அதனால், சைத்தன்யா என்பவருடன் சேர்ந்து 'மாற்றத்துக்காகக் கற்றுக்கொடுங்கள்' (Teach For Change) என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளோம். இதன்மூலம் சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கிலம் கற்றுக்கொடுக்கத் தொடங்கினோம். இந்த ஆறு ஆண்டுகளில் மிக நல்ல வளர்ச்சியை பார்க்கின்றோம். இப்போது எங்களுடன் தன்னார்வம் கொண்டவர்கள், அரசுப் பணியில் உள்ளவர்கள், ஓய்வு பெற்றவர்கள் என நிறையப் பேர் செயல்படுகின்றனர். முதல் கட்டமாக சென்னையில் சில மாநகராட்சி பள்ளிக்கூடங்களைத் தேர்வுசெய்து ஏழை மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலம் கற்றுத்தருகிறோம். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இதனை விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. ஆந்திரா, தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடகா, கேரளாவிலும் இந்தப் பணியை செய்து வருகிறோம்.

**எந்தெந்த நேரங்களில் இந்த வகுப்பு எடுக்கப்படுகிறது?**

பள்ளி நேரத்திற்கு இடையூறு இருக்கக் கூடாது என்பதால் ஒவ்வொரு சனிக் கிழமையும் வகுப்பெடுக்கிறோம். இந்தப் பணிக்கு என்று முன்வருபவர்களை கரம் கூப்பி வரவேற்கிறோம்.

**ஒருபக்கம் திரைத்துறை, இன்னொரு பக்கம் குடும்ப பொறுப்பு என்றிருக்கும் நிலையில் இதுபோன்ற பணிக்கு நேரம் ஒதுக்க முடிகிறதா?**



திரைத்துறை நட்சத்திரங்கள் என்றால் இரண்டு இறக்கைகளுடன் வானத்தில் இருந்து குதித்தவர்களா என்ன? நட்சத்திரங்களின் எஜமான் எப்போதும் ரசிகர்கள்தான். அதில் பெரும்பான்மை யானவர்கள் ஏழைகள்தான். திரைத்துறை யில் மட்டுமல்ல நிஜவாழ்க்கையிலும் அவர்களை மகிழ்விக்க என்னால் ஆனவற்றைச் செய்வதில் ஆனந்தம் கொள்கிறேன். செல்வங்கள் தராத பேரின்பத்தை இதுபோன்ற நற்காரியங்கள் செய்வதில் அனுபவிக்க முடிகிறது.

எனது சுதந்திரத்தில் குறுக்கிடாத குடும்ப வாழ்க்கை அமைந்ததற்கும் நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சென்னை ராயப்பேட்டையை சேர்ந்தவர் தான் என் கணவர். என் வேலைகளுக்கும் வெற்றிகளுக்கும் முதல் ரசிகர் அவர்தான். எங்கள் வீட்டுத் தேவதையாக வித்யா நிர்வானா என்ற பாப்பா இருக்கிறாள். அவளுக்கு தாய் என்ற கடமையிலும் அக்கறை காட்டவே செய்கிறேன்.

**'மறந்தேன் மன்னித்தேன்' படம் மூலம் தமிழில் அறிமுகமானீர்கள். தொடர்ந்து மணிரத்னத்தின் 'கடல்', ராதாமோகன் இயக்கிய 'காற்றின் மொழி' படங்களில் நடித்தீர்கள். அதன்பிறகு மீண்டும் தெலுங்கு, ஆங்கிலம் என சென்று விட்டீர்களே. தமிழ் திரைப்படங்களில் உங்களை பார்க்க முடியவில்லையே, ஏன்?**

தற்போது, மோகன்லாலுடன் 'மான்ஸ்டர்' என்ற மலையாளப் படத்தில் நடித்துள்ளேன். 'பிக்பாஸ்' தர்ஷன் நாயகனாக நடிக்கும் ஒரு தமிழ் படத்திலும் மிக முக்கியமான கதா பாத்திரத்தில் நடிக்கிறேன். உண்மையில் தமிழ் திரைப்படங்களில் நடிக்க நான் ஆர்வமாகவே இருக்கிறேன். நான் பல மொழிகளில் நடித்து வந்தாலும் தமிழ்த் திரைப்படங்கள் மீது எனக்கு எப்போதும் தனி மரியாதை உண்டு. எனவே, இதுவரை வந்த எந்த ஒரு தமிழ்ப் பட வாய்ப்பையும் நான் நிராகரித்ததில்லை. அதேபோல், இப்படிதான் நடிப்பேன், இப்படிப்பட்ட வேடத்தில்தான் நடிப்பேன் என்று சொன்னதும் இல்லை. ஆனாலும், தமிழில் நல்ல வாய்ப்புகள் வரவில்லை. தமிழ் திரையுலகில் இருந்து என்னை பலர் அணுகாததற்கு நான் பெரிய நடிகரின் மகளாக இருப்பது காரணம் என நினைக்கிறேன். நான் எப்படி நடந்து கொள்வேனோ, என்னை வைத்து எப்படி படமாக்குவது என்றெல்லாம் யோசிக்கிறார் கள் போலிருக்கிறது. ஆனால், என்னை பொறுத்தவரை நான் நடிகையாக ஒரு படத்தில் ஒப்பந்தம் ஆகிவிட்டால், நடிகை யாக மட்டுமே இருப்பேனே தவிர நடிகர் மோகன் பாபுவின் மகளாகவோ அல்லது ஒரு திரைப்பட தயாரிப்பாளராகவோ நடந்துகொள்ள மாட்டேன். இதுவரை அப்படித்தான் இருக்கிறேன், இனியும் அப்படித்தான் இருப்பேன்.

நல்ல கதையாக இருந்தால், நல்ல வேடமாக இருந்தால், எந்த வேடமாக இருந்தாலும் நான் நடிக்கத் தயாராகவே இருக்கிறேன். சின்ன 'பட்ஜெட்' படம் என்றெல்லாம் பார்க்க மாட்டேன். அதனால், தமிழ் திரையுலகினர் என்னை எந்தவித தயக்கமும் இன்றி தாராளமாக அணுகலாம். இன்னொரு முறை மணிரத்னம் சார் படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன். தனுஷ், விஜய் சேதுபதி, விஜய், சூர்யா, கார்த்தியின் நடிப்பைத் தொடர்ந்து கவனிக்கிறேன். தமிழ் திரையுலகம் அடுத்த கட்டத்துக்குப் போயிருக்கிறது. அதில் நானும் ஓர் அங்கமாக இருக்கவே ஆசைப்படுகிறேன்.

**'மீ டூ' இயக்கத்துக்குப் பின்னர் திரையுலகில் தாங்கள் எதிர்கொண்ட பாலியல் தொல்லைகள் குறித்து தொடர்ந்து நடிகைகள் மனம் திறந்து வருகிறார்கள். நீங்கள் அதுபோன்ற தொல்லைகளை எதிர்கொண்டு இருக்கிறீர்களா?**

ஆம், நானும் பாலியல் தொல்லைகளை எதிர்கொண்டுள்ளேன். தொடக்கத்தில், 'நான் பெரிய நடிகரின் மகள். தவிர ஐந்து வயதிலிருந்தே திரைப்படத் துறையில் இருக்கிறேன். அதனால் எனக்கு அது நிகழாது' என்று நினைத்தேன். ஆனால், இங்கே யாரும் உத்தமர்கள் அல்ல. இதைச் சொல்ல எனக்கு இருபது ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்திருக்கிறது, 'மீ டூ' என்ற இயக்கம் வர வேண்டியதிருந்திருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும் பெண்கள் தங்களை தற்காத்துக்கொள்வது ஒரு பக்கம் இருக்க, ஆண்களிடம் மாற்றம் நிகழவேண்டும். அவர்களுக்கு குழந்தை யில் இருந்தே இதற்கான கல்வியை கொடுக்க வேண்டும்.

> கோபம் செயலில் இருக்கக்கூடாது
> வார்த்தையில் இருக்கவேண்டும்.
> அன்பு வார்த்தையில் இருக்கக் கூடாது
> செயலில் இருக்கவேண்டும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# MORTGAGE FINANCIAL

SUBRA MORTGAGE SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- VACANT LAND
- CONSTRUCTION

*5 YEARS VARIABLE CLOSED*

| Loan Amount | Biweekly Payment |
| --- | --- |
| $755,460.00 | $1,177.78 |

*5 YEARS FIXED*

| Loan Amount | Biweekly Payment |
| --- | --- |
| $755,460.00 | $1,200.90 |





NESAN
416-908-5656

• 1st, 2nd & 3rd Mortgages • Purchase • Refinance
• Renewal • Switches • Equity lind of Credit • Pre-approvals
• Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660.5656
Fax: 647451.3099
Toll: 1-844-678.2721

Unit #406, 1585 Markham Rd,
Toronto, M1B 2W1

www.subra.com

WE DEAL WITH ALL BANKS

Brokerage #10530

Powered by

Mortgage Alliance · Scotiabank · radius financial · Equitable Bank · RMG mortgages · TD Canada Trust · RFA · First National Financial LP · Home Trust · MCAP

# பெண்ணின் பெருந்தக்க யாவுள? - 3

**விளம்பரம் சார்பாக - பாரி**

1989ஆம் ஆண்டு என் பதினாறாவது வயதில் அப்பா, அம்மா மற்றும் இரண்டு தம்பிகளுடன் கனடா வந்து சேர்ந்தேன். அப்பா இலங்கையில் மக்கள் வங்கியில் உயர் அதிகாரியாக இருந்தவர். அப்பாவுக்கு இங்கு வந்தவுடன் எந்த வேலையும் கிடைக்கவில்லை. அம்மாவுக்கும் அப்படியே!

நான் இங்கு பாடசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன். அம்மாவும், அப்பாவும் வேலை செய்யாதபடியால் நானும், தம்பியும் ஒரு துரித உணவகத் தில் மாலையில் வேலை செய்துகொண்டு படிப்பைத் தொடர்ந்தோம். உண்மையில் கஷ்டமான நாட்கள்தான். இந்த நிலைமை மாறும் என்ற நம்பிக்கையுடன் கனடாவில் எங்கள் குடும்பம் கால் ஊன்றியது. பின் அப்பாவுக்கு ஒரு வங்கியில் வேலை கிடைத்தது. எனக்கும் பல்கலைக்கழகம் போவதற்குத் தகுதி ஏற்பட்டது.

ரொறொன்ரோவில் இருக்கும் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் சேரலாம் என்ற திட்டத்தில் இருந்தேன். அந்த நேரத்தில் ஒரு கார் விபத்தில் அகப்பட்டேன். நீண்ட நாள் வைத்தியசாலையில் இருந்த படியால், ரொறொன்ரோவில் பல்கலைக் கழகம் போகும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. இடைவிடாது முயற்சி செய்து செயின்ட் கத்தரின் (St. Catharines)இல் உள்ள Brock பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது. அங்கு உளவியலைப் படித்தேன். இந்த நேரத்தில் என் அன்பான அப்பா தன்னுடைய 56ஆவது வயதில் மாரடைப்பினால் காலமானார். நான் படித்த பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் பத்துபேர் கூட இல்லை. ஒரு மாணவர் அமைப்புத் தொடங்குவது என்றால் 15 மாணவர்களாவது வேண்டும். நட்பு வட்டத்தில் உள்ள வேறு சமூகத்தைச் சேர்ந்த சில மாணவர்களின் உதவியுடன் Brock பல்கலைக்கழக தமிழ் மாணவர் அமைப்பை உருவாக்க முன் நின்றேன். அதன்மூலம், தமிழ் சமூகத்தின் சிக்கல்களை பல்கலைக்கழகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்தோம்.

ஊரில் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த காலம். எங்கள் மாணவர் அமைப்பின் மூலம் சொஞ்சோலையில் வாழ்ந்த சிறார்களுக்குச் சில உதவி



களைச் செய்தோம். இதே நேரத்தில் CIBC வங்கியிலும் பகுதிநேர வேலையில் இருந்தேன். பட்டப்படிப்பு முடியமுதலே 2002இல் மனநிலை தவறிய தமிழ் பேசும் வயது வந்தவர்களுக்கான ஓர் உதவி மையத்தை இன்னும் சிலருடன் சேர்ந்து ஆரம்பித்தேன். 2005இல் அதை தொடர்ந்து நடத்த முடியாமல் போன நிலையில் வசந்தம் (தமிழ் உளவளத் துணை நிலையம்) அமைப்பில் வேலைக்கு சேர்ந்தேன். அதில் தமிழ் சமூகத்தில் துன்புறுத்தப்பட்ட பெண்கள் தங்கள் நிலைமைகளை எப்படிக் கையாள்வது, மற்றும் குடும்ப வன் முறையைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களின் கீழ் நான் வேலை செய்தேன். இது தொடர்பாக சில தமிழ் புத்தகங்களும் வெளியிட்டோம். இதன்பின் தான் Youth Link அமைப்பில் சேர்ந்தேன்.

கடந்த 22 வருடங்களாகப் பல்வேறு அமைப்புகளில், பங்காற்றி வருகின்றேன். அதை எல்லாம் சொல்வது என்றால் அது மிக நீண்ட கட்டுரையாய் போய்விடும் என்று யுவனித்தா சொன்னபோது, அவற்றை நீங்கள் எழுதித்தர முடியுமா என்று கேட்டேன். அவர் 'ஓம்' என்று ஒத்துக் கொண்டார்.

என்னுடைய அடுத்த கேள்வி எப்படி தேர்தல் அரசியலுக்கு வந்தீர்கள்? என்ற போது....

அது தற்செயலானது. எனக்கும் தமிழ் சமூகத்திற்கு என்னால் இயன்ற உதவிகளை செய்தல் வேண்டும் என்ற கனவு மாத்திரம் இருந்தது. அப்பொழுது தான் நண்பன் நீதன் சாண் தான் மார்க்கம் கல்வி அறங்காவலர் குழுவில் இருந்து விலகி வேறொரு வேலைக்குச் செல்ல இருப்பதால் அந்த இடத்தை நிரப்புவதற்குத் தகுதியான ஆள் நீங்கள் தான், தயவு செய்து அறங்காவலர் தேர்தலில் போட்டியிட முடியுமா? என்று கேட்டார். அப்படி நீங்கள் போட்டியிட்டு வென்றால், நீங்கள் செய்கின்ற அல்லது கனவு காணுகின்ற எதிர்காலத்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

***Past & Present Affiliation/Volunteer Experience:***

- Executive member of Faces of the Heart - Women's support group (2019 - Present)
- Member of Annamalai Manavar Arangu - Annamalai Canada Campus (2020 - Present)
- Vice President of Canadian Tamil Congress, an organization promoting political and civic integration of Tamil Canadians (2011 - 2013)
- Vice Chair and then Chair of York Region District School Board (2017 - 2020)
- Chair of Budget Committee - York Region District School Board - Budget 1.5 Billion Dollars (2016 - 2017)
- Volunteer with Victim Services of York Region - Crisis Intervention (2012 - 2018)
- Co-Chair of Parent, Family and Community Engagement Advisory Committee - York Region District School Board (2011-2015)
- Co-Chair of Equity and Inclusivity committee - York Region District School Board (2015 - -2018)
- Committee Member of SEAC Advisory Committee - York Region District School Board (2017 - 2019)
- Member of York Region Parent Association (2011 - 2015)
- Member of Family Violence Advisory & Advocacy Committee (2011 - Present)
- Executive Member of York Region Equity Council (2010 - Present)
- Volunteer for Markham Tamil Seniors Center (2010 - Present)
- Awards Committee Member for "Uukkamathu Kaividale" Student Excellence Awards (2010 - Present)
- Member for Tamil Heritage Month Coordinating Committee (2009 - Present)
- Organizer of Annual Workshop "An insider's look at Canada's Tamil community" increasing awareness and tolerance (2009 - Present)
- Member of Social Planning Council of York Region (2009 - 2015)
- Former President of Markham Tamil Organization, promoting social cultural integration (2008 -Present)
- Volunteer for Food Services Net work of York Region (2008 - Present)
- Volunteer for Middlefield Seniors Wellness Center (2008 - Present)
- Volunteer at Vasantham Tamil Seniors Wellness Center (2006 - Present)
- Volunteer for Social Services Network of York Region, providing culturally sensitive services promoting healthy living (2006 - Present)
- Member of Tamil Women Abuse Prevention Working Group (2005- Present) Member of Tamil Service Providers Coalition (2004-Present)
- Member of Scarborough Civic Action Network (2006 - Present)
- Coordinating Committee Member of "Katka Kasadara" Education Expo (2009)
- Coordinating Committee Member of "In search of our roots" Youth Conference (2008)
- Volunteer Probation/Parole officer, Ministry of Community Services and Correctional Services (2007-2008)
- Volunteer for TO Tamil - Youth Tamil News Paper (2006-2008)
- Member of Women Abuse Council Steering Committee (2003 - 2006)
- Volunteer for Mt. Sinai Hospital - Assertive Community Treatment Team (2003 - 2005)
- Volunteer Manager of Allied Community Care Services - A Transition Group Home for Tamil speaking clients recovering from mental illness (2002 - 2005)
- President/Founder - Brock Tamil Student Association (1996 - 1997)

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.2881**

**KINGSTON & WHITES RD.**
1 Bedroom new bsmt for rent. Sep. entrance & parking. Close to transportation, shopping & School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.666.3971**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, free wifi & laundry. Female / couple preferred. Avail. October 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.321.1015**

**FINCH & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.670.7493**

**9TH LINE & STEELES.**
2 bedroom Bsmt for rent. Sep. entrance & parking. No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.867.5307**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MARKHAM & MC NICOLE**
1 Bedroom bsmt for rent.Sep. entrance, parking & laundry Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.515.1631**

**BIRCHMOUNT & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & Parking. No smoking & alcohol. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.529.3267**

**TAUNTON & HIWAY 412**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.200.5656**

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Young couple & non smokers preferred. Avail. immediately.
**416.287.6777 / 416.970.3464**

**SALEM & ROSSLAND**
1 bedroom bsmt for rent. Very large bedroom & parking. Avail. immediately.
**416.897.4538 / 647.308.8405**

32 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to shopping, school & all other facilities. Avail. Any time.
தொடர்புகளுக்கு: **905.471.7667**

**MARKHAM & 14th AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to shopping, school & all other facilities. Avail. October 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.822.8446**

**MARKHAM & 14Th AVENUE**
1 Bedroom bsmt for rent. Parking, laundry & utilities. Close to school, shops, park & YRT. Avail. immediately.
**647.500.4564 / 905.472.1370**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to hospital & all the facilities. Avail. October 01, 2022.
தொடர்புகளுக்கு: **437.776.8041**

**MARKHAM & STEELES**
1 bed room bsmt for rent. Seniors or couple preferred. Avail. October 01, 2022..
தொடர்புகளுக்கு: **647.219.7704**

**WARDEN & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable & internet. Close to all facilities. Avail. immediately.
**647.448.6464 / 416.332.0052**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom walk out bsmt for rent. Parking, laundry. Avail. immediately
தொடர்புகளுக்கு: **647.241.2872**

**NEILSON & MCLEVIN**
1 large bedroom walk out bsmt for rent. Sep.entrance, parking, Sep. laundry. Close to mall, TTC & School.
**416.998.4960 / 416.671.1731**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

மேலும் பக்கங்கள் 14,15,16,17

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
Newly constructed 1 bedroom bsmt for rent. Sep.entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & FINCH**
3 bedroom bsmt for rent. ep.entrance, laundry & parking. No pets & no Smoking. Avail. immediately.
**416.729.9858 / 416.735.4240**

**BROCK RD. & ROSSLAND**
2 Bedroom walk-out bsmt for rent. Sep.entrance, laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.554.4416**

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.675.4799**

**MARKHAM & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent .Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **416.898.1242**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable & internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.317.8449**

**MARKHAM & 14TH AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, internet & parking. Avail. September 15, 2022.
தொடர்புகளுக்கு: **647.706.1342**

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry & internet. Female only. Avail. October 01, 2022.
தொடர்புகளுக்கு : **416.908.1250**

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**416.843.0011 / 647.293.8109**

## ROOM FOR RENT

**WESTNEY & ROSSLAND ( Ajax)**
Room for rent in main floor. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.688.2440**

**NEILSON & MC LEVIN**
1 Room for rent in main floor. Male preferred. Shared kitchen & washroom. Avail. immediately.
**647.780.2463 / 647.824.2357**

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent. Close to S.P. Importers & all other facilities. Avail. immediately.
**416.299.4852 / 647.533.9930**

**NEILSON & ELLESMERE**
One room for rent in a town house. Close to U of T Scarboro. campus & hospital. Female students prefered. Avail. October 01, 2022.
தொடர்புகளுக்கு **647.741.0040**

**MARKHAM & LAWRENCE**
1 room for rent in a bsmt. Sep. entrance. Single woman preferred. Avail. immediately.
**647.201.7016 / 647.838.5448**

**WARDEN & LAWRENCE**
1 room for rent with food. Couple / two friends / small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.223.6617**

## *BASEMENT FOR RENT*

**MORNINGSIDE & STAINES**
1 Large bedroom bsmt for rent. Parking. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.502.5448 / 647.677.5488**

## *BASEMENT FOR RENT*

**ALTONA & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Nice environment with close to all facilities. Avail. immedietley.
**416.278.3993 / 416.729.4704**

## *BASEMENT FOR RENT*

**MORNINGSIDE & SHEPPARD**
1bedroom bsmt for rent. Sep. entrance, laundry. 3 Minutes to TTC. Close to Uof T, Centennial College. Maximum 2 people. No smoking & no pets. Avail. immedietley.
தொடர்புகளுக்கு: **647.273.4225**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MCCOWAN & EGLINTON**

2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & utilities. Close to all facilities. No pets & nosmoking. No parking. Students or small family preferred. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.678.8641**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**

1 bedroom bsmt for rent. Laundry & parking. Small family or female students or seniors preferred. No pets & no smoke. Close to HWY 401, mall, TTC & university. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.729.4939**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**

3 bedroom walkout basement with 2 full washrooms & laundry room, for rent. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.888.9437**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

3 Bed room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: **647.703.3254**

## BASEMENT FOR RENT

**9TH LINE & STEELES**

2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.931.3444**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

2 Bedroom very large bsmt for rent. Sep. entrance parking & laundry. Close to TTC, Schools & all other facilities. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.819.6988**

## BASEMENT FOR RENT

**Taunton & Whites Road**

2 bedroorm bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail.October 08, 2022.

தொடர்புகளுக்கு: **416.918.5065**

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**

1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close toall facilities. Avail. immediately.

**416.519.9441/ 647.625.4876**

## BASEMENT FOR RENT

**WESTNEY & HWY 401 (Ajax)**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking & laundry.

**LAKERIDGE & HWY 401 (Whitby)**

2 Bedroom bsmt for rent. Parking & Laundry. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.201.1222**

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**

1 Room for rent in main floor. Ladies preferred. Avail immediately.

**WESTNEY & TAUNTON ( Ajax)**

Room for rent. Close to all facilities. Avail. November 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.720.8796**

## ROOM FOR RENT

**BIRCHMOUNT & SHEPPARD**

2 Rooms for rent in a bsmt. Sep. entrance & parking. Male preferred. Close to all facilities. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.873.0549**

## CONDO FOR RENT

**MARKHAM & EGLINTON**

3 bedroom condo for rent. 1.5 washrooms. Hydro & water included. Short term rental available. Students / single ladies /couple preferred. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.705.3272**

## HOUSE FOR RENT

**MCCOWAN & BRIMOTON**

4 bedroom house for rent. 2 bathrooom & large eat in kitchen. Avail. immediately

தொடர்புகளுக்கு: **416.897.4282**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM& STEELES**

4 bedroom house for rent. Also 2 bedroom bsmt for rent . Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.660.4874**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**

3 bedroom house for rent. Kitchen , bath & 3 parking. No pets. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.998.0181**

**16TH AVENUE & DONALD COUSEN**

4 bedroom brand new house for rent. Mins. to Markville mall, hwy 407, hospital & school.

தொடர்புகளுக்கு: **416.559.8680**

**SCAR.GOLF.CLUB & BRIMORTON**

3 bedroom house - main floor for rent. Laundry & parking.Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.836.5482**

**MARKHAM & STEELES**

3 bedroom new house for rent. Close to Cost Co and all other facilities. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.827.3206**

**OSHAWA**

4 Bedroom full house for rent. 3.5 washrooms & parking. Unfinished bsmt. Close to university - UOIT.

தொடர்புகளுக்கு: **647.978.2785**

**MARKHAM & ELSON**

4 bedroom house for rent. Close to school & all other facilities. Female students /working ladies preferred. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.737.1146**

**BRIMLEY & ELLESMERE**

3 bedroom bungalow house for rent. 1.5 washrooms. Close to Scar. TownCenter & all other facilities. Avail. from September, 2022.

தொடர்புகளுக்கு : **647.649.9780**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## FREE ROOM IN APARTMENT

**MCCOWAN & FINCH**

FREE 1 bedroom. Sharing the 2 rooms apt. with an elderly lady. Steps to TTC & woodside mall. Avail. October 10, 2022.

**647.299.7855**

## CONDO. APT. FOR RENT

**KENNEDY& ANTRIM CRESCENT**

2 bedroom Condo. apt. for rent. Parking . Close to hwy 401, TTC & School. Avail. October 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.909.9603**

## APARTMENT / ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**

1 Bedroom apartment for rent.

**ALSO**

1 room for rent in a 2 bedroom bsmt . Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.708.3444**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**

1 bedroom, sep. kitchen & hall -ground floor house for rent with parking. Close to university, TTC, school & other all facilities. Couple/ seniors/ students preferred. Avail.immediately.

தொடர்புகளுக்கு: **647.656.9050**

## HOUSE FOR RENT

**MARKHAM & PAINTED POST**

4 bedroom semi detached house for rent. Avail. immediately.

Also we offer **PARALEGAL SERVICES.**

Please Call: **647.204.0680**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

## BASEMENT FOR RENT

**BROCK & KINGSTON**

1 bedroom brand new legal bsmt for rent. 1 full washroom and a parking also available. Sep. entrance. Walking distance to Pickering Town centre. Close to HWY 401 & allshopping facilities. Suitable for Small family or couple. No pet & No smoking. Avail. immediately

**416. 731.8542 / 416.301.4783**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELSON**

Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. 2 Mins walk to public school. No pets. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.418.6934**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement** வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## JOB JOB JOB

Job available to work with offices and banks. No experience needed. Free training is provided. Excellent opportunities to get started part-time! Also looking for experienced painters and cleaners.

தொடர்புகளுக்கு: **416.890.7510**

## PSW WANTED

முதியோரை பராமரிப்பதற்கு ஆங்கிலம் பேச, எழுதக் கூடிய அனுபவமுள்ள பெண் **PSW** பராமரிப்பாளர் தேவை. தங்கியிருந்து பராமரிக்கக் கூடியவர்களும் விரும்பத்தக்கது.

**647.272.6993 / 416.613.1840**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

**STAINES & MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**MAID WANTED IN MAPLE CITY (RUTHERFORD & KEELE)**

வீட்டில் வேலை செய்வதற்குப் பெண் பணியாளர் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

**416.826.6101/ 647.625.3475**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Scarborough**இல் அமைந்துள்ள புடவைக் கடைக்கு விற்பனை மற்றும் தையல் பகுதிகளுக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

**FULL TIME / PART TIME**

**647.779.2358 / 647.667.0479**

## வேலைக்கு ஆட்கள் தேவை

***NEWMARKET & AURORA***

பகுதியில் **Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு:

***647.763.0850***

## HOUSE / BASEMENT FOR RENT

**CHURCH & ROSSLAND**

4 bedroom detached house for rent. 3 washrooms, 3 parking & laundry. Close to public transportation, shops, parks & school bus route.

**MORNINGSIDE AVE. & NEILSON RD.**

2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & shared laundry on the main floor. Bsmt tenant pays 35% utilities.

தொடர்புகளுக்கு: **416.509.7247**

## வயோதிபர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பொறுப்பான திருப்தியான பராமரிப்பு வழங்கப்படும். நீண்ட கால, குறுகிய கால, தற்காலிக வதிவிட வசதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.667.0482**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## *HOUSE FOR RENT*

**BEAVERTON , ONTARIO**

5 Bedrooms 2 year old, beautiful house for rent in Beaverton. No pets & no smoking. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.662.1418**

## மணமகள் தேவை

**1988**இல் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த Torontoஇல் நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு மணமகளைத் தேடுகிறோம்.

**416.269.4729/647.866.4729**

## மணமகள்/மணமகன் தேவை

இந்து வேளாளர்குலத்தைச் சேர்ந்த 31 வயது மணமகனுக்கு மணமகளை கனடாவில் தேடுகிறோம்.

29 வயது இலங்கை பட்டதாரி மணமகளிற்கு இலங்கையில் மணமகனைத் தேடுகிறோம்.

**416.903.0821/647.609.5031**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## USED CARS WANTED

**USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.**

**Call: 437.688.6305**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact:**பிறேம் **647.835.5244**

## COOK WANTED

**COOK WANTED IN ETOBICOKE**

We are looking for a experienced Line Cook for a Sports Bar at Lakeshore Blvd. West and Brownsline in Etobicoke. Full and Part Time available.

Please Call - Larry at **416.251.9080**

## HELP WANTED

**FLOWER SHOP** ஒன்றிற்கு பணியாளர் தேவை. ஓய்வு ஊதியம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது. ஆங்கிலம் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

We are looking for full time & part time employee for our **Flower Shop.** Flexible hours available.

Please contact: **(905) 553.0777**

## *COOK / KITCHEN HELP WANTED*

***VICTORIAPARK & HWY 401*** (Scarborough)இல் அமைந்துள்ள **ENGLISH PUB**க்கு Experienced LINE COOK, COOK HELP & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.

Please contact at ***416-566-9994***

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

***We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.***

உங்களது ***rooms , house or basement*** இனை சட்டரீதியாக ***University / College Students*** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**

***HomeLife Future Realty Inc. Brokerage***

பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

416.613.1840 / 647.272.6993

birdsilvergardens@gmail.com

MAIN INTERSECTION:-( Port Union & Island Road) )

RENOVATION

- Plumbing
- Painting
- Electric
- Tiles
- Basement
- Hardwood
- Laminating
- Kitchen
- Landscaping
- Interlock

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com

MOVING & JUNK REMOVAL

WE OFFER THE FOLLOWING SERVICES

1. MOVING 2. JUNK & GARBAGE REMOVAL

3. PICKUP & DELIVERY போன்ற தேவைகளிற்கு அழையுங்கள்

647.832.6899


முட்டாள் என்ற பட்டம் கிடைப்பதற்கு அறிவு இல்லாமல் இருக்கத் தேவையில்லை. அதிக அன்போடு இருந்தாலும் போதுமானது


AZ DRIVER WANTED



Hiring AZ Drivers for short haul. Keep you busy year Round 60-70 hrs/week. Paying top $$ Hourly & per miles plus HST. Come home every day. Paying weekly direct deposit. Requirement Must have proof of experience minimum of 3 years as a AZ Diver Clean driving record. Able to cross border Canada/USA. Need to have Canadian passport/ Fast card or US Visa. If you have interest in this position and meet the stated requirement.

Please submit your resume and drivers abstract or

Call Raj @ 905-297-8985 Ext. 101

Email: Info@casritransport.com

Fax: 905-390.3016


## பெண்ணின்...

12ஆம் பக்கத் தொடர்ச்சி

திட்டங்களுக்கு, உங்களுக்கு உதவியாய் இருக்கும் என்றார்.


பலத்த யோசனைக்குப் பிறகு சம்மதித்தேன். இது 2010ஆம் ஆண்டு. ஒரு தமிழர் உட்பட 5 ஆண்கள் என்னை எதிர்த்துப் போட்டியிட்டனர். நான் வென்றேன். பின்பு - 2014ஆம் ஆண்டு, 2018ஆம் ஆண்டுகளில் மீண்டும் தெரிவாகி இன்றுவரை நான் கல்விச்சபை பிரதிநிதியாக இருக்கின்றேன்.

இம்முறை மார்க்கம் நகர சபை தேர்தலில், கவுன்சிலராகப் போட்டியிடு கின்றேன். மார்க்கம் நகரத்தின் 7ஆம், 8ஆம் வட்டாரங்களில் தமிழர்கள் ஒரு காலத்தில் செறிவாக இருந்தனர். இன்று பலபேர் வேறு இடங்களுக்குச் சென்று விட்டாலும் இருக்கும் தமிழர் எல்லோரும் வாக்களித்தால் நான் இலகுவாக வெல்வேன் என்று நம்பிக்கை தெரிவித்தார். நாங்களும் வாழ்த்துக் கூறி விடைபெற்றோம்.

# இன்பம் எங்கே?

இன்பம் எங்கே இன்பம் எங்கே
என்று தேடுவோர் பலர்
துன்பத்தைக் கண்டு தூரத்தே பயந்து
என்றும் ஓடுவர் பலர்
அன்னையின் மடியில் தலையை அன்பாக
என்றும் வைத்திருந்தால் இன்பமே!
கன்று தாயைக் கண்டு விட்டால்
என்றும் இருவருக்கும் இன்பமே!

இயற்கைக் காட்சியை இதமாகப் பார்த்தாலே
வியக்கத் தக்க இன்பமே!
பயனான நூல்கள் படித்தே பாமரர்க்கு
பயனும் சொன்னால் இன்பமே!
கயல்விழி அழகுள்ள கன்னியரைக் காளையர்
நயமாகக் கண்டால் இன்பமே!
சுயமரியா தையுடன் சுதந்திரமா கவேநாட்டில்
பயமின்றி வாழ்ந்தால் இன்பமே!



மதுவை அருந்திச் சுவைத்து மனதை
மதமாக்கி மயங்குவது இன்பமா?
மாதரின் துணைதேடி ஓடியே மடிமீது
புதுமை செய்வது இன்பமா?
பணத்தைச் செலவே செய்யாது பதுக்கிய
வண்ணம் இருந்தால் இன்பமா?

குணமான மனைவி அமைவாகக் கிடைத்தால்
மணமான வாழ்வு இன்பமே!
பாசம் நிறைந்த குடும்பத்தில் பிரிவின்றி
வாசமுடன் வாழ்ந்தால் இன்பமே!
காசு இல்லாத போதுமே கல்வியில்
மாசின்றிக் கூடுவது இன்பமே!
துணைவியின் அன்புச் சிரிப்பினால் துயரும்
அணைந்து விடுவதினால் இன்பமே!
அணைத்து வைத்து அருகினிலே அன்புடன்
அனைவரும் வாழ்த்த இன்பமே!

காதலில் பிறந்த பிள்ளைக் கனிஅமுதும்
ஆதவனால் பிறந்தால் இன்பமே!
பாதம் எனது மார்பினிலே பதிய
உதைப்பது அதைவிட இன்பமே!
உன்னை அறிந்து ஊரார்க்கு உதவினால்
உண்மையில் கிடைக்கும் இன்பமே!
தன்னலம் மறந்து தொண்டையும் தாழ்வுடன்
அன்புடன் செய்தால் பேரின்பமே!

பாகப்பிரிவு இன்றி பக்குவமாய்ச் செயல்பட்டு
நாகரிக மாய் நடந்தால் இன்பமே!
காக்கை போலவே கரைந்து ஒன்றுபட்டு
ஆக்கமுடன் நின்றால் இன்பமே!
நிமிர்ந்த வாழ்வும் நேரிய எண்ணமும்
நமக்கு உதித்தால் இன்பமே!
தில்லைக் கூத்தனை தினமும் வணங்குவோம்
எல்லோரும் இன்புற்று இருக்கவே!

- கந்த இளையராஜன்

# Property Management

**Unit #210 — 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5**

## Available for Rent

**Downtown — Bloor St / Parliament St – Condo**
**(2Brm + 2Bath + 1 Parking) [$3,150/m]**
**Scarborough — Mcnicoll / Brimly Rd – Detached Bsmt**
**(1Brm + 1Bath +1 Parking ) [$1,000/m]**
**Pickering — Whites and hwy2 Kingston —Detached Bsmt**
**(1Brm + 1Bath + 1 Parking) [$1,600/m]**
**Amherstview— — Detached**
**(4 Brm + 3Bath) [Contact 416-284-9999]**
**Bowmanville, Clarington — King St / Martin Rd — Semi-Detached**
**(3+1Brm + 2Bath) [3,000/m]**
**Brampton — Mayfield Rd / Dixie rd — Detached Bsmt**
**(1Brm + 1Bath) [$1,600/m]**
**Markham — Steeles /Markham — Detached Bsmt**
**(3Brm +2Bath+ 1 Parking) [$2,000/m]**

## Available for Rent

**Markham — Steeles /Mccowan — Detached Bsmt**
**(3Brm +3Bath+ 1 Parking) [$2,000/m]**
**Scarborough—Mccowan/Lawrence — Bungalow – Bsmt**
**(2Brm+1Bath) [$2, 000 *Including utilities]**
**Scarborough— Bellamy Rd & Lawrence — Detached Main Floor**
**(3Brm+1Bath) [$2,600/m]**
**Scarborough – Midland Ave & Huntingwood– Bungalow – Bsmt**
**(4Brm +3Bath) [$2,950/m]**
**Markham — Mccowan & Denison—Detached – Bsmt**
**(1Brm +1Bath+ 1 Parking) [$1,450/m]**
**Scarborough— Birchmount & Lawrence— Detached Bsmt**
**(2Brm +1Bath) [$1,600/m]**
**Oshawa—Central Park Blvd/Bond– Detached — Main floor**
**(2Brm +1Bath) [$2,700/m]**

## *How to select the right tenants for your Rental Property.*

வாடகைக்கு கொடுக்கும் போது சரியானவர்களை தெரிந்தெடுப்பது எப்படி?

தவறான வாடகையாளர்களை வீட்டில் இருத்தி விட்டால் தொடர்ந்து பிரச்சனை தான். வாடகைப்பணம் அறவிடுவது தொடக்கம் தேவையான போது அவர்களை அந்த வீட்டில் இருந்து எழுப்புவது வரை சிரமம் அனுபவிக்க வேண்டி ஏற்படலாம். அதனால் அவர்களைத் தெரிவு செய்யும்போது சரியான கேள்விகளைக் கேட்டு விசாரித்து எடுப்பது நல்லது.

- ஏன் அவர்கள் வீடு மாறுகிறார்கள்?
- அவசரமாக வீடு மாறவேண்டும் என்றால் ஏன் அவசரம்?
- அவர்களுக்கு நிரந்தர வருமானம் உள்ளதா? போதுமானதா? ஆதாரங்கள் தருவார்களா?
- எத்தனை பேர்? குடும்பமா? தனிப்பட்டவர்களா? அவர்களிடையே உள்ள உறவு முறை என்ன?
- அவர்கள் Credit History நல்லதா? Credit Report தருவார்களா?
- வளர்ப்பு பிராணிகள் ஏதும் உள்ளனவா? என்ன பிராணிகள்? எத்தனை பிராணிகள்?
- எத்தனை வாகனங்கள் வைத்திருக்கிறார்கள்?
- முதலிருந்த வீட்டில் எவ்வளவு காலம் குடியிருந்தார்கள்? அந்த வீட்டு உரிமையாளர்களைத் தொடர்பு கொள்ளலாமா?
- குடியேறும் வீட்டில் எவ்வளவு காலம் வசிக்க உத்தேசம்?
- முதல், கடைசி மாத வாடகைப்பணம் கையிருப்பில் உள்ளதா? தேவையேற்படின் மேலதிக வாடகையும் செலுத்தத் தயாரா? அல்லது Guarantors இருக்கிறார்களா?

எங்கே அல்லது எப்படி பிரச்சனைகள் ஆரம்பிக்கலாம் என சில அறிவுரைகள்.

- குடும்பம் அல்லாத தனிப்பட்டவர்கள் சேர்ந்து இருக்கும் இடத்தில் வீட்டின் பராமரிப்பு சரியாக இருக்காது. அவர்களிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்படலாம். தனிப்பட்ட ஒருவர் வேலை மாற்றம் காரணமாக, அல்லது வேறு காரணம் சொல்லி விலகிச் செல்லலாம். வாடகையைச் சமாளிக்கப் புதிதாக இன்னொருவரைப் புகுத்த அவர்கள் முயலலாம். அதிகமானவர்களின் நடமாட்டம் பிடிக்காமல் அயலவர்கள் Cityக்கு அறிவிக்கலாம். இதனால் Cityயின் குறுக்கீடுகள் தொடங்கலாம்.
- வருமானம் போதாதவர்களுக்குக் கொடுத்து விட்டால் வாடகைப்பணம் நேரத்திற்கு வந்து சேராது. அவர்களை எழுப்ப வழக்குகள் தொடரவேண்டி ஏற்படலாம்.
- வளர்ப்பு மிருகங்களுடன் இருத்தி விட்டால் அந்த மிருகங்கள் வீட்டைப்பழுதாக்க வாய்ப்புண்டு. அயலவர்கள் முறைப்பாடுகளுக்கும் இடமுண்டு. ஒரே வீட்டில் வேறொரு வாடகையாளரும் இருந்தால் அவர்களது நிம்மதியும் பாதிக்கப்படலாம். சில மிருகங்கள் அவர்களுக்கு ஒத்துவராமல் (Allergy) போகலாம்.
- புல்வெட்டாமல், Snow அகற்றாமல் வீடு இருந்தால் City தண்டம் விதிக்கலாம்.
- இவையெல்லாவற்றையும் விட வாடகை கொடுக்காமல் ஏமாற்றும் மனப்பான்மையுடன் ஒரு கும்பல் வாடகைக்கு வீடு தேடி வரும். அவர்கள் இதில் நன்கு அனுபவமுள்ளவர்கள். அவர்களிடம் அகப்பட்டால் உங்கள்பாடு திண்டாட்டம் தான். வாடகைப் பணமும் வந்து சேராது. அதைவிட வெவ்வேறு விதமான பிரச்சனைகளைத் தொடர்ந்து உருவாக்கி வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார்கள். இவர்களை இனங்கண்டு தவிர்ப்பது தான் கெட்டித்தனம்.

சரியான முறையில் நீங்கள் Tenantsஐ ஆரம்பத்தில் விசாரித்துத் தெரிந்து எடுத்து இருத்தினால் உங்கள் வீடும் பத்திரமாக இருக்கும். வருமானமும் ஒழுங்காகக் கிடைக்கும். மன உளைச்சலும் இருக்காது.

அடுத்த இதழில் வாடகைக்கு விடுவதற்கு எப்படியான வீடுகளை தெரிந்தெடுத்து வாங்குவது நல்லது எனப் பார்ப்போம்.

தேவை ஏற்படின் தொடர்பு கொள்ளுங்கள்.

***Karu Kandiah - Watson Property Management: 416-284-9999***

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

**கரு கந்தையா – 416.616.7278 Watson Property Management – 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# திருச்சிற்றம்பலம் - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

இப்படத்தின் பெயர் இதில் வரும் இரு கதாபாத்திரங்களின் பெயர்களைக் குறிக்கின்றது. ஒருவர் கதாநாயகன் (தனுஷ்) மற்றவர் அவரது தந்தையின் தந்தை (பாரதிராஜா) ஆவர்.

இவர்கள் இருவரும் கதாநாயகனின் தந்தை நீலகண்டன் (பிரகாஷ் ராஜ்) உடன் சேர்ந்து ஒரு வீட்டில் வாழ்கின்றனர். சாப்பாடு விநியோகிக்கும் தொழில் செய்யும் கதாநாயகன் எல்லோராலும் பழம் என அழைக்கப்படு கிறார். தனது தாயின் அகால மரணத்தின் பின்னர் படிப்பைக் கைவிட்ட பழம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு சாதாரணமாக வாழ்கிறார்.

அவருக்குத் துணையாக இருப்பது அவருக்குப் பக்கத்து வீட்டில் வாழும் அவரது நெடுங்கால நண்பி ஷோபனா (நித்யா மேனன்). பழம் ஒவ்வொரு முறையும் ஒரு பெண்ணைக் காதலிக்கும் போது ஷோபனா அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்கிறார். கதாநாயகன் ஏதாவது ஒரு காதலில் வெற்றி பெறுவாரா இல்லையா என்று கூறுவதே இப்படத்தின் கதை. அதை அறிவதுடன் கதாநாயகன் வாழ்க்கையில் வெற்றிபெறுவாரா? தனது தாயின் இறப்பிற்குத் தந்தையே காரணம் என்று அவருடன் கதைக்காமல் இருக்கும் பழம்,



தனது தந்தையுடன் மீண்டும் கதைப்பாரா? என்ற கேள்விகளும் இருக்கின்றன. இவற்றிற்குப் பதிலைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் சண்டைக் காட்சிகள் பெரிதாக இல்லை. சாதாரண கதா நாயகன் பற்றிய கதை சாதாரணமாகச் செல்கிறது. இக்கதை மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வையோ புதிய செய்தியையோ கூற இயக்குநர் முயலவில்லை. எனவே எளிமையாகப் படம் செல்கிறது.

எல்லா நடிகர்களும் பாத்திரத்திற்கு ஏற்ப நன்றாக நடித்துள்ளனர். நித்யா மேனன் கதாநாயகனின் தோழியாக தனுஷிற்கு



நிகராக நடித்துள்ளார்.

இப்படத்தில் காதல் காட்சிகள் ஒரு சிறப்பு அம்சமாகும். அதாவது பழம் ஒரு பெண்ணிடம் தனது காதலைத் தெரிவிக்கும்போது அவள் அவனை மறுக்கிற விதமும், அந்த மறுப்பை கதாநாயகன் ஏற்கின்ற விதமும் மிகவும் நன்றாக அமைந்துள்ளன.

பொதுவாக ஒரு பெண் கதாநாயகனைக் காதலிக்க மறுத்தால் கதாநாயகன் அவளைப் பின்தொடர்ந்து, வற்புறுத்தி, அவளைக் குறைகூறி, கதாநாயகன் குடித்துவிட்டுப் பாடுவது போன்ற காட்சிகள் வரும். இறுதியில் கதாநாயகி தான் செய்தது தவறு என்று கூறுவார்.

இப்படத்தில் இத்தகைய காட்சிகள் வராதது மிகவும் சிறப்பாக இருந்தது. தான் விரும்பிய பெண் தன்னை விரும்பவில்லை என, பழம் அறிந்தவுடன் அதை ஏற்று அவளை அவருடைய வழியில் விடுகிறார்.

மூன்று தலைமுறை ஆண்கள் தனித்து ஒரு வீட்டில் வாழும்போது ஏற்படும் சிக்கல்கள் நன்றாகக் காட்டப்படுகின்றன. வாகனம் செலுத்தும்போது ஒரு கணம் கவனத்தைத் திசை திருப்புவதால் ஏற்படும் விபத்தும் அதனால் ஏற்படும் வேதனையும் பார்வையாளர்களுக்கு நேரடியாகக் காட்டப்படுகிறது.

எனவே கதாசிரியரின் புதிய, சிறந்த நோக்கத்தை அறிய இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

# அமைதியே உலகின் அடிநாதம்



யதுசனா சவுந்தரராசா
அகவை 18

உலகெங்கும் சமாதானத்தை நிலை நாட்டி வன்முறைகள், யுத்தங்கள், பிரிவினைகள் எதுவுமற்ற அமைதியான சூழலை உருவாக்கும் நோக்கோடு ஆண்டுதோறும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி சர்வதேச சமாதான தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 24 மணிநேர வன்முறை தவிர்ப்பு, போர் நிறுத்தம் மற்றும் அகிம்சையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக அமைதிக்கான வழிகளை வலுப்படுத்த அர்ப்பணிக்கப் பட்ட ஒரு நாளாக இத்தினத்தை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு வருடமும் மில்லியன் கணக்கான மக்களின் பங்களிப்புடன் உலகின் பல பாகங்களிலும் செயலமர்வு கள், பேரணிகள், இசைக் கச்சேரிகள் மற்றும் பல்வேறுபட்ட வேடிக்கை நிகழ்வுகளின் மூலமாகவும் சமாதானத்தை அனைவர் மனத்திலும் விதைப்பதற்கான பல செயற்திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆகவே உலக சமாதானத்தின் முக்கியத்துவம் பற்றி நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமான ஒன்றாகும்.

சமாதானம் என்பது என்ன? வெறும் யுத்தங்கள் அற்ற நிலையை மட்டுமே சமாதானம் எனக் கருதலாகாது. வன்முறைகளில் இருந்து மீண்டெழல், தனிநபர் கருத்து வேறுபாடுகளால் ஏற்படும் முரண்பாடுகளை தவிர்த்தல், வாழ்க்கை பற்றிய பயத்திலிருந்து மீளல், சமூகக் கட்டமைப்புக்களாகப் பார்க்கப் படும் சாதி, மதம், மொழி போன்றவற்றால் ஏற்படும் பிரிவினைகளைத் தவிர்த்தல் மற்றும் மனிதரை பிற மனிதரில் இருந்து வேற்றுமைப்படுத்தும் எத்தகைய அம்சங்




உலக சமாதான தினம் - செப்ரெம்பர் 21ஆம் திகதி

களினாலும் யாருக்கும் பிரதிகூலமற்ற நிலைமை அமைவதை நாம் சமாதானம் எனலாம்.

இரு மாபெரும் உலக யுத்தங்களைக் கண்ட பூமி இது. இன்றும் நாடு களிடையே மற்றும் மாநிலங்களிடையே யான யுத்தங்கள் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்றவண்ணமே உள்ளன. காரணம் யாதாயிருப்பினும் இறுதியில் பாதிக்கப்படுவது அப்பாவி பொதுமக்களே.
பஞ்சம், பட்டினி, உடல் ஊனம், உயிரிழப்பு, வாழ்விடங்களை இழத்தல், கல்வியை இழத்தல், அடிப்படை சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை என யுத்தங்களின் பாதிப்புக் கள் எண்ணிலடங்காதவை. மேலும், யுத்தங்கள் நாட்டினை பொருளாதார ரீதியில் பெரும் வீழ்ச்சியடைய வழியமைக் கின்றன. போட்டி நிறைந்த இக்காலத்தில் நாடுகள் மட்டும் விதிவிலக்கல்ல. பொருளாதாரம், விஞ்ஞானம், அறிவியல் மற்றும் இயற்கை வளங்கள் போன்ற வற்றில் உலக நாடுகள் பலவும் தம்மை முன்னிலைப்படுத்தப் பெரும் போட்டித் தன்மையுடன் செயற்பட்டு வருகின்றன. இந்நிலையில் பிற நாடுகளையும் ஆக்கிரமித்து தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதற்கு ஆயுத வழியைப் பயன்படுத்தி யுத்தத்தைக் கையிலெடுப்பது வேதனைக்குரியது.

இரு மாபெரும் உலக யுத்தங்கள் உலகின் அமைதியை சீர்குலைத்தன. மீண்டும் இந்நிலை ஏற்படாதிருக்க ஐக்கிய நாடுகள் சபை 1945ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இருப்பினும் நாடு களிடையிலான போர்கள் பூரணமாக முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. உலக நாடுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்த ஐ.நா சபை தீவிரமாக செயற்பட்டது. இத்தகைய முயற்சியின் போது ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் ஹாமர் ஷோல்ட் விமான விபத்தொன்றில் 1961ஆம் ஆண்டு காலமானார். இதை யடுத்து அவர் மரணித்த செப்ரெம்பர் மாதம் மூன்றாம் வாரம் வரும் செவ்வாய்க் கிழமை சர்வதேச அமைதி தினமாக ஐ.நா சபையால் 1981ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர் 2002 ஆம் ஆண்டு முதல் இது செப்ரெம்பர் 21ஆம் திகதி ஆண்டுதோறும் ஒவ்வொரு கருப்பொருளின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மனிதரும் பெறுமதி மிக்கவர். வாழும் உரிமையுடன் இப்புவியில் பிறந்தவர். யாரும், யாருக்கும் கீழ்ப்பட்டவர் அல்லர். மனித வாழ்க்கை அற்புதமானது. அன்பு செலுத்துவதனால் மட்டுமே மனிதர் ஒருவரை ஒருவர் வெல்ல வேண்டும். ஆயுதங்களால் அல்ல. ஒரு சதாப்தமேனும் நீடிக்காத அற்ப ஆயுட்காலத்தில் எத்தனையோ பிரிவினைகளும், முரண்பாடுகளும் வாழ்வின் தருணங்களை பொலிவிழக்கச் செய்கின்றன.


2022 ஆம் ஆண்டின் சர்வதேச சமாதான தினமானது "இனவெறிக்கு முடிவு கட்டுவோம், அமைதியை உருவாக்கு வோம்" என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்பட்டு வருகிறது. இனவெறி என்பது காலங்காலமாக உலகம் முழுவதுமே அவதானிக்கக் கூடிய ஒரு விடயமாக உள்ளது. தோலின் நிறம், பேசும் மொழி மற்றும் கடைப்பிடிக்கும் மார்க்கங்கள் மனிதன் இன்னொரு மனிதனை அடிமையாகப் பார்ப்பதற்குரிய

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

# Executive House for Sale

## CLARINGTON / NORTNVILLE



- Land Size from 0.50 Acre to 1.0 Acre
- Standard House size from 3000 SF to 10,000 SF
- Gararges : 3 or 2
- Type of Houses : Bungalow, Bungalow with Loft and 2 Storey
- Only 45 minutes from Scarborough

**Phase I Only 21 Lots**

**Completion : Spring 2025**

*For more information*
*Feel Free to Call .....*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East. Unit 222 Toronto ON M1S 0C2

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com


INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

BUYING / SELLING HOMES

BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* Independently owned and operated.
* We help to find your best future home!


## அமைதியே...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

விடயமாக இருப்பது மிகவும் வேதனை தரும் விடயம். பிரிட்டிஷ் காலனித்துவக் காலத்தில் உச்சக்கட்ட நிலையை அடைந்திருந்த நிறவெறியானது காலங் கடந்து இன்றும் பலர் மத்தியில் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

உலகம் அமைதிப் பூந்தோட்டமாக இருக்க வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பமாகும். அதே நேரத்தில் தாம் கடைப்பிடிக்கும் வெவ்வேறு கொள்கைகளின்படி பிறருடன் வேற்றுமையை பேணுவது உலக அமைதியை எப்போதும் ஏற்படுத்தி விடாது. நாடுகளிடையேயான அரசியல் கொள்கைகளாயிருக்கட்டும், வேறுபட்ட கலாசாரத்தை பின்பற்றும் மக்களாயிருக்கட்டும், ஒருவரை தாழ்த்தி இன்னொருவர் உயர்வடைய முயற்சிப்பது சமாதானத்தை நிலைகுலைக்குமேயன்றி ஒருபோதும் அமைதியை ஏற்படுத்தி விடாது.

நாடுகளிடையேயான யுத்தம் அதன் பின்னரான பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், அதன் வடுக்களை யாராலும் போக்கி விட முடிவதில்லை. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் வீசப்பட்ட அணுகுண்டுத் தாக்கம் பல தசாப்தங்கள் கடந்தும் அப்பகுதி மக்களை பாதித்து வந்தது. போரில் ஏற்படும் உடல் ஊனங்கள் மீண்டும் சரிசெய்ய முடிவதில்லை. உயிரிழந்தோரை மீண்டும் கொண்டுவர முடிவதில்லை. இவ்வாறு பிரதிகூலங்களை மட்டுமே ஏற்படுத்தும் இப்போர்கள் மனித இனத்துக்கு ஏற்பட்ட சாபங்களாகும்.

வீட்டு வன்முறைகள், சமூக கலவரங்கள், பால்நிலை சமத்துவமின்மை, தொழில் ரீதியான முரண்பாடுகள், போதைப் பொருட்கள் எனப் பல்வேறு காரணங்களும் சமூகத்தின் அமைதி நிலையை சீர்குலைக்கின்றன. போட்டி, பொறாமை, பகைமை என மனிதரின் மனங்களை தீய எண்ணங்கள் ஆக்கிரமிக்க விழைகின்றன. இவை அனைத்தும் ஒருபோதும் நாம் எதிர்பார்க்கும் மகிழ்ச்சியை எமக்குத் தந்து விடப்போவதில்லை. மாறாக அது அனைவரின் நிம்மதியையும் பாதிக்கின்றன.

தனி மனிதனாயிருப்பினும் ஒரு தேசமாக இருப்பினும் பகையுணர்வோ வேற்றுமை மனப்பாங்கோ இருந்தால் அது ஒருபோதும் நன்மையை ஏற்படுத்தாது. ஒற்றுமையே ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் மிகப்பெரும் தூணாகும்.




"பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சிறக்கென வாழ்த்தி" என ஒரு தேசத்தை வாழ்த்துகிறது சிலப்பதிகாரம். பசி, பட்டினியற்ற, சமாதானமும் அமைதியும் நிறைந்த தேசமே மக்கள் மகிழ்வான வாழ்க்கை வாழ்வதற்கான தேசமாகும். இவ்வாண்டின் சமாதான தினத்துக்கான கருப்பொருளானா "இனவெறிக்கு முடிவு கட்டுவோம், அமைதியை உருவாக்குவோம்" என்பது இக்காலத்துக்கு மிகுந்த அவசியமான ஒரு விடயமாகக் காணப்படுகிறது. அதாவது மனிதர் எந்தவொரு வன்முறையிலோ, சட்ட விரோத செயற்பாடுகளிலோ ஈடுபடா விட்டாலும் சாதாரணமாக பிறப்பாலோ அல்லது பின்பற்றும் கலாசாரத்தாலோ பெற்ற அடையாளத்தை தரித்திருப்பதாலோ வெறுக்கப்படுகின்றனர். இதற்கு யாராலும் தகுந்த நியாயமான காரணம் அளிக்க முடியாது.


மாந்தரிடைய காணப்படும் இன வேற்றுமையை பாரதியார் "வெள்ளை நிறத்தொரு பூனை" சிறுவர் பாடலில் குறிப்பிடுகிறார்.

"எந்த நிறமிருந்தாலும் அவை
யாவும் ஒரேதரம் அன்றோ
இந்த நிறம் சிறிதென்றும் இஃது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ" என்பது அப்பாடலடி ஆகும். வண்ணங்கள் வேறுபட்டாலும் அது வெறும் தோற்றத்தில் மட்டுமே. எண்ணங்களும், செயல்களும் தூய்மையாய் இருத்தலே ஒரு மனிதனை உயர்ந்தவராக்கும்.

உலகத்தின் சமாதானம் என்பது ஒவ்வொரு தனி மனிதனின் கையிலேயே உள்ளது. குடும்பத்தில், நாம் வாழும் சமூகத்தில், சாதாரணமாக நாளாந்தம் அறிமுகமாகும் நபர்களிடத்தில், நண்பர்களிடத்தில், எப்போதுமே நேரான சிந்தனையும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் இருந்தால் வேற்றுமை என்ற சொல்லுக்கே இடமிருக்காது. சிறு பிராயத்திலிருந்தே பள்ளி மாணவர்களுக்கு சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

எதிர்மறை சிந்தனைகள் மனிதரை ஆக்கிரமிக்க விட்டால், மகிழ்ச்சி என்ற சொல்லுக்கே இடமிருக்காது. அன்பு செலுத்துவதற்கும், புன்னகையைப் பரிசளிக்கவும் ஒரு சதமேனும் செலவாவதில்லை. வேற்றுமைகளைக் களைந்து அனைவருடனும் ஒற்றுமையாக "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்பதற்கேற்ப சமாதானத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்வோம்..

# இதயம் கண்ணர் இரத்தம்



கண்ணழகில் கலையமுத முத்தமிழ் தெரிகின்றது
யாப்பு அணி எழில் முத்து இரத்தினங்களை
இதழ் திறந்த சிரிப்பொலியில் சிந்துகின்றாய்

தென்றலில் உன் அசைவு காணும்போதெல்லாம்
தமிழ்த்தேகம் சிலிர்க்கிறது
ஆடுகின்ற மயில் அழகு கலந்து அசைந்து
பாடுகின்ற குயிலின் மொழி இனிமை தந்தாய்

அழியாத எண்ணப் பறவையின் முதுகில் அமர்ந்து
உலகில் பரந்து உறங்காது பயணிக்கின்றாய்

நடனமாட அழைக்கிறாய் பண்ணிசை மொழிதனில்
இசை கனியும் பாடல்கள் பலவாறு புழகி வந்தேன்
நேசப்பார்வை உன் கதிர் வீச்சின் ஒளி அசைவில்

ஐந்திணைப் பறவைபோல் நீண்டவரிக் கழுத்தழகி
சங்க இலக்கியத்தில் ஆரம் அணிந்த பேரழகி
புழும் தமிழில் பிழிந்தெடுத்த அமுதசுரபி முப்பாலை
மொழிகள் பலவற்றிலும் மொழிமாற்றி ஊட்டுகின்றாய்

மாலைக் கருக்கலில் சோலைக்கிளைகளில்
சிறகசைத்துக் குடும்பமாய் மகிழ்ந்து வாழும்
காட்டுப் பறவைகளின் எழிசைக் கலப்பினில்
இன்னிசைச் சொர்க்கத்தைக் கற்றுத் தருகின்றாய்

அறிஞரின் புலமை ஒளி வெளியில் உலா வருகின்ற
பகலவனாய் மிளிர்கின்றாய்
இதயத்தில் ஊற்றெடுக்கும் ஞானத்தில்
ஆய்வு விதைகள் தூவுகின்றாய்

வாய்மொழிக் கருவினில் பிறந்து வளர்ந்தவள்
எட்டுக்கோடி இதயக்கண்ணில் வாழ்கின்றவள்

மொழிச்சிதைவு நோய்க்கிருமி காற்றில் பரவி
நாவின் ஒலி மோகனத்தை மெல்லச் சுரண்டும்போது
நாடி நரம்புகளில் அரும்பிச் சிந்துகின்றன
உயிர் பிழியும் கண்ணீர்த் துளிகள்!



முத்துராஜா